Regd No. TN/TJ/17.

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண் :

திரு. ....

மா. 5. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர்
சரஸ்வதி மகால் நூல்நிலையம்
அரண்மனை, தஞ்சாவூர்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கக் கோவை	0—12
சித்தாந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல்—சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப்பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின்—கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர்—ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள் :	
கலைக்கூத்தன் கவிதைகள்	6—00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : 58 மலர் : 5

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: 2015—இரத்தாட்சி ஆவணி
(1984 ஆகஸ்ட் — செப்டம்பர்)

MALLIKA ARTS

பொழிற்றொண்டர் :
ச. பாலசுந்தரம்

THE THANJAVUR MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY THANJAVUR

தமிழ்ப் பொழில்

துணர் : 58 | உள்ளுறை | மலர் : 5

1. மடங்கள் 241
டாக்டர். இராம சுப்பிரமணியன்,
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எஸ்ஸி., பி.எச்.டி.,
7, தீத்தாரப்ப முதலிதெரு,
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

2. முத்தி நெறி 247
டாக்டர். மொ. அ. துரை. அரங்கசாமி,
எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 20.
(சென்ற இதழ் தொடர்ச்சி)

3 அறிவியல் பண்ணை 259
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

4. தமிழ் ஆங்கில மொழிகளில்
பெயரெச்சத் தொடர்கள் 261
வீ. ரேணுகாதேவி,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

5. பல்லவர்கால இலக்கியங்களில்
சமுதாயம் 275
பா. மதிவாணன்,
துணைப் பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி.

தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 58 ❋ திருவள்ளுவர் யாண்டு — 2015
இரத்தாட்சி — ஆவணி
ஆகஸ்ட் — செப்டம்பர் 1984 ❋ மலர் : 5

மடங்கள்

டாக்டர் இராம. சுப்பிரமணியன்,
எம்.ஏ.பி.எல்., எம்.லிட்.எஸ்ஸி., பீஎச்.டி.,
7. தீத்தாரபபமுதலிதெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005

'மடம்' என்ற சொல்லுக்கு ஒரு சாது அல்லது சந்நியாசி இருக்கும் உறைவிடம் எனப் பொருள்கூறப்படும்.

தமிழின் வரலாற்றில் புகழ் நிறைந்த செய்தி திருக்கோயில்களின் தோற்றமும் திருமடங்களின் தோற்றமுமாகும். தமிழகம் பாசம் படைத்து, ஞாலம் விளக்கி வாழ்விக்கும் திருமடங்கள் நிறைந்த நாடு. திருமடங்களின் கடமை யாதெனில்; ஆன்மாக்களின் திருகலாயதோர் சிந்தையினைத் திருத்திக் கேளாதவற்றைக் கேட்டுவித்து – காணாதவற்றைக் காண்பித்துப் பரமாயதோர்

ஆனந்தம் பெற்று மகிழத் தூண்டுதலும், கற்றுத்தருதலும், வழி நடத்தலும் - துணை நிற்றலுமாகும். 'தகுதிபடைத்த உத்தமத் துறவிகளைத் தேடிப்பிடித்தல் பயிலுவிக்கும் நிறுவனம் 'அறிவு படைத்த சன்மாக்கத் துறவிகளைத் தயாரித்து அவர்கள் நாடெங்கும் சென்று சமரச சன்மார்க்க பிரசாரம் செய்யவேண்டும்'. யோக நீதிகளை உரைக்க வேண்டும். 'அருள் உபதேசங்களை விளக்கும் நூல்களை உருவாக்க வேண்டும்.

பலவகைச் சமய தத்துவங்களைக் கொண்ட சம்பிரதாயங் களைச் சார்ந்த திருமடங்கள் மக்களுக்குப் பொதுவாக உள்ள சமய உண்மைகளை எடுத்துக் கூறுவது அவைகளின் சிறப்பு நோக்கம். மக்கள் நமது இந்து மதத்தின் முக்கியமான கருத்துக்களையும் நமது பழம்பெரு முனிவர்கள் போன்றவர்களுடைய அனுபவத்தின் பயனாக வெளிப்பட்டுள்ள சிறந்த உண்மைகளையும் அறிந்து அவற்றின்படி ஒழுகவேண்டும் என்ற நிலைமையை இத்திருமடங்கள் ஏற்படுத்துகின்றன.

சமயப் பெருமக்கள் தங்கியிருந்த இடங்கள் மடங்கள் எனப் பெயர் பெற்றன. அத்தலைவர்கள் சிறந்த கல்விமான்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் விளங்கினர். அவர்கள் வாழ்ந்த மடங்கள் மாணவர்க்குக் கல்விபுகட்டும் கலைக்கூடங்களாகவும், யாத்திரிகர், திக்கற்றவர் முதலியோர்க்குப் புகலிடங்களாகவும் சமயவுண்மை களை உணர்த்தும் அருள் நிலையங்களாகவும் விளங்கின. இவை அரசர், சிற்றரசர், செல்வர் முதலியவரால் அமைக்கப்பட்டவை.

சைவ மடங்களுள் காபாலிக மடம், பாசுபதமடம், காளாமுக மடம் எனப்பல திறப்பட்டவை இருந்தமை காபாலிகர் மடம், காஞ்சி ஏகாம்பர நாதர் கோயிலை அடுத்து இருந்தது என்பது மகேந்திரன் வரைந்த மத்தவிலாசத்தைக் கொண்டு உணரப்படும். கொடும்பாளூர் முதலிய இடங்களில் காளாமுகச் சைவ மடங்கள் இருந்தன என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. திருக்கச்சி மேற்றளியைச் சார்ந்த மடமொன்று நந்திவர்மன் ஆட்சிக்காலத்தில் இருந்தது என்று கல்வெட்டுக் கூறுகின்றது. 'காவிரிப் பாக்கத்து வரதராசப் பெருமாள் கோவில் கல்வெட்டில்' 'மடத்துச் சத்த பெரு மக்கள்' என்ற தொடர் காணப்படுகிறது'. இத்தொடரால் மடத்தை மேற்பார்த்த அறிஞர் எழுவர் இருந்தனர் என்பது சமயச் சார்பான பலவகை மடங்கள் ஏற்பட்டன. காளாமுகச் சைவர் கொடும்பாளூர் முதலிய இடங்களில் மடங்களை அமைத்துக் கொண்டு வாழ லாயினர். (1)

---

(1) 129 of 1907, 352, 357 of 1911 and 192 of 1928.

சில காலம் தென்னகத்தில் ஜைனமும், பௌத்தமும் பெரும் பான்மையான மக்களால் பின்பற்றப் பெற்றிருந்தும் இந்து மதத்தில் தோன்றிய சீர்திருத்தத்தாலும் சைவ, வைணவ ஆசிரியர் களின் அருளுரைகளாலும் அவைகள் அடுத்து விரைவில் அழிவு நிலை எய்தியது. இதற்குக் காரணம் பல்வேறு திருமடங்களும், அற நிலையங்களும் வேதாந்தத்தை அனுஷ்டிக்கப்படுபவர்களால் அக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. பௌத்த மதம் நாளடைவில் கீர்த்தி இழந்து 7-வது நூற்றாண்டின் இறுதியில் சீர்குலைந்தது. அப்பொழுது ஸ்ரீசங்கரர் அவர்கள் தோன்றினார். தென்னிந்தியாவில் 8-ஆம் நூற்றாண்டில் சங்கரர் தோன்றினார். 'சங்கரர்' அத்வைதத்தினைப் போதித்தார். நாட்டின் முக்கிய பகுதிகளில் சமுதாயத்தின் ஆன்மீக நலன்களைப் போற்றிப் பாதுகாக்கும் ஆசாரிய பீடங்களை ஏற்படுத்தினார். அவைகளில் நான்கு திரு மடங்கள் மிகவும் முதன்மையானவை. வடஇந்தியாவில் இமய மலைச் சாரலில் பத்ரிநாத் என்னுமிடத்தில் நிறுவிய ஜோதிர்மடம்; (2) கிழக்கிந்தியாவில், கட்டாக்கிலுள்ள பூரி என்னும் இடத்தில் நிறுவிய கோவர்த்தன் மடம்; (3) மேற்கிந்தியாவில் பம்பாய் இராஜதானியிலுள்ள துவாரகா என்னும் இடத்தில் ஏற்படுத்திய மடம்; (4) தென்னிந்தியாவில் கிருடனாக மாநிலத்திலுள்ள துங்கபத்திராவில் ஏற்படுத்திய சிருங்கேரி மடம் இந்து மதத்தில் தோன்றியுள்ள தத்துவக் கொள்கைகள் பலவற்றுள் அத்வைதத் தத்துவக் கொள்கையும் ஒன்று. அது பழமை வாய்ந்தது, இந்தியாவின் பல பகுதிகளிலும் பல மொழிகளிலும் பரவியிருப்பது. இதினில் இருந்தே கேவலாத்துவைதம் (சங்கரர்) விசிட்டாத் துவைதம் (இராமானுஜர்), துவைதம் (மத்துவாச்சாரியார்) சைவ சித்தாந்தம் (மெய்கண்டார்) துவைதாத்வைதம் (சைதன்னியர்) சிவவிசிட்டாத்துவைதம் (ஸ்ரீகண்டர்), சிவாத்துவைதம் (அப்பையதீ தீட்சிதர்) என்னும் பல்வேறு கொள்கைகளும் தோன்றுவனவாயின.

சங்கரருக்குப் பின்னர் இரண்டு நூற்றாண்டுகள் கழித்து இராமானுஜர் தோன்றினார். இவரைப் பின்பற்றியவர்கள் வைணவர்கள் ஆவார்கள். இவர்கள் தென்கலை, வடகலை என்று இரு பிரிவினர்களாகத் தனித்தனர். ஸ்ரீஅஹோபில மடம் வடகலை யினையும், ஸ்ரீவானமாமலை மடம் தென்கலையினையும் பரப்பு வதற்கு ஏற்பட்டது.

ஸ்ரீமத்வாச்சாரியர் கி. பி. 12-ம் நூற்றாண்டின் இறுதியில் உடுப்பிக்கு அருகில் தோன்றினார். மத்வதும் விஷ்ணுவை முழு முதற் கடவுளாகக் கொள்கின்றார். பாகவத புராணத்தால் மிகப் பெரிதும் கவரப்பெற்ற மத்வர் கிருஷ்ண வழிபாடு நெறியைப்

பரப்பினார். இவர் உடுப்பியில் 8 மடங்களை நிறுவினார். இவ்வித மடங்களின் பீடாதிபதிகள் தங்கள் மதக்கொள்கையைப் பிரசாரம் செய்வது மட்டுமன்றி உடுப்பி தெய்வத்தானத்தில் பிரதிஷ்டைச் செய்துள்ள அருள்மிகு கிருஷ்ணருடைய திருமேனிக்கும் பூஜையும் செய்வார்கள். இவ்விதமாக ஏற்படுத்திய எட்டு மடங்கள் யாதெனில் 1. அத்மார்; 2. கனியூர், 3 கிருஷ்ணாப்பூரி, 4. பாலிமார், 5. பெஜாவூர், 6. புட்டிகே 7. ஷிரூர், 8. கோடே மேற்குறித்த 8 மடங்கள் அன்றி மைசூர் கர்னாடக மாநிலத்தில் வியாசராய, உத்திராதி மடங்களும், பண்டாரிகாரே, பீமசேது மடங்களும் இருக்கின்றன.

திருவொற்றியூரில் காபாலிக மடம் இருந்தது. அதன் தலைவர் அனைவரும் 'சதுரானன பண்டிதர், என்றே பெயர் பெற்றனர். அவர்கள் மடத்து ஆட்சியில் பங்கு கொண்டனர்.

கோளகி மடம் என்ற பெயரில் பல மடங்கள் பல ஊர்களில் இருந்தன. திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பா சமுத்திரத்தை அடுத்த வாலீஸ்வரம் என்னும் இடத்தில் ஒரு மடம் இருந்தது. அங்கு இரண்டு ஆசாரியர்கள் இருந்தனர். திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள ஆற்றூரில் கோளகி மடம் இருந்தது. திருவாரூர் மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களில் கோளகி மடம் இருந்தன என்பதும் அறியக்கிடக்கின்றன. (1)

காசியைச் சேர்ந்த கொல்லர் மடத்துக் கிளை மடங்கள் தொண்டை நாட்டுத் திருப்பாசூர் முதலிய இடங்களில் இருந்தன. பாண்டிய நாட்டுப் பிரான் மலையில் ஒரு மடம் இருந்தது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் அந்த மடத்துக்கு நிலங்களை அளித்தபின் திருவானைக்காவலிலும் ஒரு மடம் இருந்தது. (2)

காசியைச் சேர்ந்த பிட்சா மடத்துக் கிளைகள் பத்தணை நல்லூர், பாண்டிநாட்டுத் திருப்புத்தூர், தேவிகாபுரம் (வடஆற்காடு மாவட்டம்) திருநெல்வேலி மாவட்டத்து மணப்படைவீடு முதலிய இடங்களில் இருந்தன. 'அவற்றைச் சேர்ந்த தலைவர்கள் சமயப் பிரசாரம் செய்து வந்தனர், (3)

ஏறத்தாழக் கி. பி. 13 – ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சில புதிய மடங்கள் தோன்றின. அவற்றுள் சிறந்தது திருச்சத்தி முற்றத்துத் திருஞானசம்பந்தன் திருமடம் என்பது. இதன் கிளை

---

1. 359 of 1916, 364 of 1916, ARF, 1929 — 30 P. 37.
2. 111 of 1930, 209, 211 of 1924, and ARP, 1929 — 30 P. 9.
3. 72 of 1930 - 37, 164 & 173 of 1935 - 36, 352 of 1912, 443 of 1909

மடங்கள் ஆனைக்கா, உசாத்தானம், விழிமிழலை, வலிவலம் முதலிய இடங்களில் தோன்றின. (4)

திருவிடை மருதூரில் இருந்த மாளிமை மடத்து முதலியார் சந்தானத்தைச் சேர்ந்த தத்தனுடையார் ஈசான தேவர் என்பவர் நல்லூரில் இருந்தார். சண்பைக்குடி முதலியார் சந்தானத்தைச் சேர்ந்த மடம் ஒன்று திருவானைக்காவலில் இருந்தது. திருவாரூரில் ஆசாரம் அழகியான் திருமடம் என்று ஒன்று இருந்தது. அதன்கிளை பாண்டிநாட்டுத் திருப்புத்தூரில் திருஞானசம்பந்தன் திருமடம் என்ற பெயருடன் விளங்கியது. மூன்றாம் இராசேந்திரன் காலத்தில் கோவந்தபுத்தூரில் திருத்தொண்டத் தொகையான் திருமடம் என ஒன்று திகழ்ந்தது.

ஆண்டாள்-மருதப் பெருமாள் சந்தானத்தைச் சேர்ந்த நமச்சிவாயம் என்பவர் ஏறத்தாழக் கி. பி. 1230-இல் திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டன் திருமடத்தைக் கட்டினான். அதற்கு நிலம் தானம் செய்யப்பட்டது[5].

பாகூர் என்பது திருப்பாதிரிப் புலியூர்க்கும்; புதுச்சேரிக்கும் இடையிலுள்ள பெரிய பாதையில் அமைந்துள்ள சிற்றூர் ஆகும். இங்குப் பல்லவர் காலத்தில் ஒரு வடமொழிக் கல்லூரி இருந்தது. அக்கல்லூரியில் பதினான்கு கலைகள் கற்பிக்கப்பட்டன; பதினெட்டுவகை வித்தைகளும் நான்கு வேதங்கள் ஆறு அங்கங்கள், மீமாம்சை, நியாயம், தர்மசாஸ்திரம், புராணம், மருத்துவம், வில் வித்தை, இசை, பொருள் நூல் முதலியன பாங்குறக் கற்பிக்கப் பட்டன. இக்கல்லூரி நடப்பதற்கு மூன்று கிராமங்கள் தானமாக விடப்பட்டன[6].

பல்லவ பேரரசர் தனிப்பட்ட மறையவர் கல்வியைப் பாராட்டி ஊர்களையும் நிலங்களையும் தானஞ் செய்தனர். இரண்டு வேதங்களிலும் ஆறு அங்கங்களிலும் வல்லவனாக கோலசன்மன் என்ற பிராமணனுக்கு ஆந்திர நாட்டில் ஓங்கோடு என்ற சிற்றூர் தானமாகக் கொடுக்கப்பட்டது. அதனைக் குறிப்பதே ஓங்கோட்டுப் பட்டயம்.[7]

சங்கராசாரியார் மடம், உடுப்பி மாத்துவ மடம், தருமபுர மடம், திருவாவடுதுறை மடம், திருப்பனந்தாள் மடம், திருக்கணன்குடி

---

4. 586 of 1908, 218 of 1908, 392 of 1908, 108 & 109, of 1911.
5. 76 of 1922.
6. Ep. IND. Vol 18 p 11
7. Ep. IND. Vol 15 p 250.

மடம், வானமாமலை மடம், அகோபில மடம் முதலியன தமிழகத்தி லுள்ள மடங்களில் குறிப்பிடத்தக்கவைகள். மடாதிபதிகள் சீடர் களுடைய அன்புக்கும் மக்களுடைய மதிப்புக்கும் பாத்திரமானவர் களாக, அறிவும் ஒழுக்கமும் உடையவர்களாக இருந்தபடியாலும், அவர்கள் மக்களுக்குப் பலவித நன்மைகள் செய்து வந்தபடியாலும், அரசர்களும் சீடர்களும் ஏராளமான சொத்துக்களை அறக்கொடை களாகக் கொடுத்ததோடு பல கோயில்களை நடத்தும் பொறுப்பை யும் அவர்களுக்கு வழங்கினார்கள். இந்த அறக்கொடைகளின் துணை கொண்டு மடாதிபதிகள் மக்களிடையே இறை உணர் வினைப்பரப்பி வந்தார்கள். தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் முதலிய மடங்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி உள்ளது.

ஒரு மடத்தின் முக்கிய நோக்கம் யாதெனில் சமயக் கல்வியை விரிவாக்குவதற்கு வேண்டி, மடத்தின் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கும் சமயக் குரவர்களை பாதுகாத்து அவர்கள் மடத்தில் சீடர்களுக்கும், மடத்தில் பற்றுள்ளவர்களுக்கும் மடம் எந்த சமய ஞானத்தில் ஈடுபட்டிருக்கிறதோ, அந்த மதக்கொள்கையை அவர்களுக்கு போதித்து, இந்து சமயத்தை முன்னேற்றச் செய்வதே யாகும். கோயில் அல்லது தெய்வத்தானத்தின் நோக்கம் யாதெனில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தெய்வத்தின் திருமேனிக்குப் பூசை முதலியன நடத்தி, ஏற்பட்டுள்ள பழக்க வழக்கத்திற்குகந்தபடி திருவிழாக்களும் நடத்துவதேயாம். தெய்வ வழிபாட்டிற்கு அடுத்த நிலையில் ஏழைகளுக்கு அன்னம் அளித்தல் முதலான அறங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் இவ்வா றான அறங்கள் சிறப்பாக இருக்கவேண்டுமென்பதல்ல. இம் மாதிரியாகச் சீடர்களையும், வழிப்போக்கர்களையும், யாத்திரிகர் களுக்கும் சாதுக்களுக்கும் உணவு வழங்குவது ஒரு மடத்தின் தலைவருக்கு ஏற்பட்ட அல்லது சம்பந்தப்பட்ட அறச்சிந்தனையே என்பது டாக்டர் முகர்ஜி[8] அவர்களின் கூற்றாகும்.

8. (Hindu Law on Religions & Charitable Trust)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

உபராமம், உபரதி, ஓய்வு, விடல் என்பன ஒரே பொருளை உணர்த்தும் சொற்களாகும். பற்றின்றித் தொழிலாற்றுதல் உபராமமாம். நுகர்ச்சியிற் பற்றின்மை வைராக்கியமாம். இவ்வேறுபாடு அறிக. திதிட்சை ஆவது பொறுத்துக்கொள்ளுதல் ஆகும். பசி வந்த விடத்து, "ஐயோ! அப்பா! பசி எடுக்கிறதே! உயிர் போய்விடும்போல் இருக்கிறதே! என்ன செய்வேன்!" என்று கூவிக் கதறாமல், அப்பசியைப் பொறுத்துக்கொள்வதே திதிட்சை ஆகும்.

நெடுவழியே நடந்து செல்லும் ஒருவன், வெயில் மிகுதியும், காய்ந்தவிடத்துச் சிறிது பொறுத்துக்கொண்டு அயராது நடந்து கொண்டே போவானானால், அந்த நெடுவழியைக் கடந்ததும், வெயிலால் வந்த துன்பத்தைப் போக்கிக் கொண்டு, குறித்த செயலையும், முடித்துக்கொண்டு, வெற்றியொடு திரும்பமுடியும். மாறாக, வெயில் மிகுதியால் வேதனை அடைந்து, "ஐயோ! அப்பா! என்று கூவிக்கொண்டு, வழியைக் கடக்க முடியாமல், இடையில் தங்கிவிட்டால், வெயில், துன்பத்தையும் போக்கிக் கொள்ள முடியாது; குறித்த செயலையும் செய்து முடிக்க முடியாது. வெயில், குளிர், பசி நீர்வேட்கை முதலியன ஏற்பட்டபோது துன்பம் ஏற்படத்தான் செய்யும். துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு, உழைப்பைத் தளரவிடாமல், விடாமுயற்சியுடன் மேற்சென்றால் நெடுவழியைக் கடந்துசென்று, குறித்த செயலை முடித்துக் கொண்டு, வெற்றியுடன் திரும்பமுடியும். எனவே, முத்திநெறி செல்ல விரும்புவோர், இடையில் ஏற்படும் வேதனைகளைப் பொறுத்துக்கொள்ளும் ஆற்றலுடையராதல் வேண்டும். அவ்வாறு பொறுத்துக் கொள்ளுதலே திதிட்சை அல்லது சகித்தல் எனப்படும்.

திதிட்சை, சகித்தல், பொறுத்துக் கொள்ளுதல் என்பன ஒரு பொருட் கிளவிகளாம்.

புறப்பொறிகளுக்கும், அகக்கருவிக்கும் விருப்பமான புலன்கள் (விஷயங்கள்) எதிர்ப்பட்ட விடத்தில், பழைய பழக்கப் பதிவுக் கிளர்ச்சிகளால், விருப்பம் எழுவது இயற்கை. அயலான் மனைவி ஒருத்தி, அழகெல்லாம் திரண்டு விளங்குவாளானால், அவளிடம் விருப்பம் எழுவது, அழகால் ஈர்ப்புண்ட பழைய பழக்கத்தின் முதிர்ச்சியால் இயற்கையே ஆகும். ஆனால், அயலான் மனைவியிடம் விருப்பம் கொள்வது அறம் ஆகாது. தன்மனைவியிடம், ஒருவன் விருப்பம் கொள்வானானால் தனக்கு எப்படி அவனிடம் அருவருப்புத் தோன்றுமோ, அப்படியே அயலான் மனைவியிடம் தான் விருப்பம் கொண்டால் அவ்வயலானுக்குத் தன்னிடம்

அருவருப்புத் தோன்றவே செய்யுமன்றோ? அம்மட்டோ? ஆதனால் தீமையும் துன்பமும் விளையும் என்பது சொல்லாமலே விளங்கும். எனவே தன் விருப்பத்தினை வளரவிடாது தடுத்துப் பொறுத்துக்கொள்ளுதல் இன்றியமையாது வேண்டப்படும். இவ்வாறு பொறுத்துக்கொள்ளுதல் இயல்பே திதிட்சை அல்லது சகித்தல் ஆகும். முத்திநெறி செல்வார்க்குத் திதிட்சை இன்றியமை யாதது. அஃது இன்றேல் எந்தச் செயலையும் முற்ற முடித்தல் இயலாததாகும். முத்திநெறியே செல்வார்க்கு, இடையிடையே, தோன்றும் பொருள்களில் விருப்பம் விரிந்தால், அந்த நெறியே சென்று முத்தியை அடைதல் இயலாத செயலாகும். ஆதலால், வெயில், பசி, நீர்வேட்கை, மங்கையர் மேல் மையல் முதலிய வற்றினைப் பொறுத்துக் கொள்ளுதலாகிய திதிட்சை முத்திநெறி செல்வார்க்கு இன்றியமையாத சாதனம் (கருவி) என்பது வெளிப்படை.

சமாதானம் என்பது அமைதி என்று பொருள்படும். மூன்றாம் கருவியின் ஆறுபகுதிகளுள் முதலாவது சமம் எனப்படுவதாம், என்பது அறிந்தோம். சமம் ஆவது அகக் கரண தண்டம் என்பதும் அறிந்தோம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என அகக்கரண மாகிய அந்தக் கரணம் நான்காகத் திரிபு பட்டு நிற்கும் என்பதும் முன்பே அறிந்தோம். அகக்கருவியின் முதல் திரிபு வகையே மனம் எனப்படும். அகக்கருவியைத் தடுத்தல் என்றால் அதன் முதல் திரிபு வகையான மனத்தைத் தடுத்தல் என்பதுதான் பொருள். ஏன்? மனமே இடைவிடாமல் மறத்தலும் நினைத்தலும் செய்து கொண்டே இருப்பதாகும். ஓயாமல் அலைந்து கொண்டேயிருப்பது மனத்தின் இயல்பாகும். நிலைபேறிலாத பொருள்களை மறத்தலும் நினைத்தலும் செய்யும் தொழிலிலிருந்து மனத்தை அடக்கி, நிலை பேறுடைய உயிரையும் அதன் இயல்பையும் எண்ணுமாறோ, உயிருக்கு வேறாகாது, உயிர் வடிவமாகவே இலங்கும் இறைவனை எண்ணுமாறோ அதைச் செய்தல் வேண்டும். இந்த அளவில் மனத்தைத் திருப்பி விடுதலையே சமம் என உணர்தல் வேண்டும்.

அவ்வாறு செய்யும்போது, ''ஏன் பிற பொருள்களை மறத்தல் நினைத்தல் செய்யாது, உயிரையோ, இறைவனையோ எண்ணுதல் வேண்டும்?'' என்ற கேள்வி மனத்தில் எழும். உடனே, அகக் கருவியின் மற்றொரு திரிபுநிலையான புத்தி அல்லது அறிவு ஆராயத் தொடங்கும். ஆராயுங்கால், பிற பொருள்களின் நிலைபேறின்மையாகிய இயல்பும், உயிர் அல்லது இறைவனின் நிலைபேறுடைமையாகிய இயல்பும், நிலைபேறிலாப் பொருள் களைப் பற்றி நிற்றல் அறியாமையாம் என்னும் உணர்வும்,

நிலைபேறுடைய உயிர்ப் பொருளைப் பற்றி நிற்றல் அறிவுடைமை யாம் என்னும் உணர்வும் தோன்றும், இவ்வகைப்பட்ட ஆராய்ச்சிக்குப் பெரியோர்களிடத்துக் கேட்டறிந்த அறிவு நூற் பொருள்கள் மிகவும் துணை செய்யும். இவ்வாறு புத்தி அல்லது அறிவு ஆராய்ந்தபின், அகக்கருவியின் மற்றொரு திரிபு நிலையான சித்தம் அறிவுநூற் பொருளையே சிந்திக்கத் தொடங்கும். பிற பொருள்களின் செல்லாதவாறு தடுக்கப்பட்ட அகக்கருவியின் திரிபாகிய சித்தம் பெரியோர்களிடத்துக் கேட்டறிந்த அறிவு நூற் பொருளையே சிந்திக்கும்படி செய்தல்தான் சமாதானம் எனப்படும். உறக்கம், சோம்பல் முதலியவற்றை விடுதலால் உண்டாகும் அகக்கருவியின் நிலையே சமாதானம் ஆகும் என்று கூறுவதும் உண்டு. ஓயாது சுழலும் மனசிந்தனை எவ்வகையி லாவது உயிர்வடிவமான இறைவனிடம் என்றும் அமைதியுடன் நிலைபெறுமாறு ஊன்ற வைத்தலே சமாதானம் ஆகும் என்று விவேக சூடாமணி என்னும் நூல் கூறும்.

> "சிரவணப் பொருளைத் தானே சித்தம்
> சிந்திக்குமாறு சரதமாய் வைக்கும் இத்தைச்
> சமாதானம் என்பர் மேலோர்" என்பது சமாதானம்

என்பதன் இலக்கணத்தைக் கைவல்ய நவநீதம் உணர்த்தும் தொடராகும்.

சிரத்தை என்பது மதிப்புடன் கூடிய அன்பு என்று பொருள் படும். சிரத்தை, விசுவாசம், நம்பிக்கை, ஈடுபாடு, அக்கறை, அன்பு என்பன ஒரே பொருளை உணர்த்தும் சொற்களாம். முக்தி நெறி செல்வார்க்குச் சிரத்தை மிகமிக இன்றியமையாததாகும். சற்குரு மொழியிலும், மறைமொழியிலும் மிகுந்த அன்பு வைத்தல் சிரத்தையாகும். மறைமொழிகள், என்றைக்கும் மாறாத உண்மை மொழிகள் ஆகும். அவைகள், இன்னாரால், இக்காலத்தில் கூறப்பட்டன அல்லது எழுதப்பட்டன என்று அறிவதற்கு எந்த வரலாற்று நூலும் துணையாகவில்லை.

'ஐந்தும் மூன்றும் எட்டு' என்பது என்றைக்கும் மாறாத உண்மை முடிவாகும். இந்த முடிவைக் கண்டுபிடித்தவர் யார்? கண்டுபிடித்தவர் இன்னார் என்று அறிய மாட்டாமையால், அந்த முடிவு நமக்கு வேண்டா என்று அதனைத் தள்ளி விடலாமா? அங்ஙனம் தள்ளிவிடுவது அறிவுடைமை ஆகுமா? இத்தகைய உண்மைகளெல்லாம் தொன்று தொட்டலவ; தொடக்கம் கூற முடியாதவை; அநாதியானவை; தம்மைக் கண்டுபிடித்தவர் அல்லது படைத்தவர் இன்னார் என்று கூற முடியாதவை. கடவுட்

கொள்கை உடையவர் யாவரும் மறைமொழிகளெல்லாம் இறைவனால் படைக்கப்பட்டவை என்று கூறிவிடுவர். மக்களுடைய மனத்தால் எட்டியறியாத முடிபுகளையெல்லாம் இறைவன் படைத்தான் என்று கூறிவிடுவது நம்மவர் மரபாகும். மனத்திற்கு அப்பாற்பட்ட இறைவன் படைத்தான் என்று கூறுவதில் ஒரு பொருத்தத்தையும் நாம் உணர்கின்றோம்.

மக்கள், தோன்றிய காலம் தொடங்கி, மாறாத உண்மைகள் அவர்களிடையே நிலைபெறுவன ஆயின. உண்மைக்கு மாறானவையெல்லாம் நிலைபேறில்லாமல் மறைவன ஆயின, உண்மை மொழிகளான மறைமொழிகள் கற்றாய்ந்தடங்கி ஒழுகிய பெரியோர்கள் வாழ்க்கைக்கு வழித்துணை ஆயின. அவற்றின் துணைக்கொண்டு பயின்ற பயிற்சியால், தாம் கண்டறிந்த காட்சிகளை (அநுபவங்களை) ஏனையவர்கள் பயனடையும் பொருட்டு அவர்கள் அருட்பாடல்களாக வெளியிடலாயினர். அவைகளே திருக்குறள், திருவாய்மொழி, தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களாக உருவெடுத்தன. மறைமொழிகளும் அவற்றின் வழி ஒழுகிய பெரியார் நூல்களும் என்றும் எல்லார்க்கும் வழி காட்டும் வழித்துணை நூல்கள் ஆகும். அந்த நூல்களைப் பயின்றால்தான், "உண்மை ஈது ; பொய் ஈது" என்ற வேறுபாடு உணரமுடியும் ; உண்மையைக் கொண்டு பொய்யை விலக்க முடியும். எனவே, மேலான மறைமொழிகளிலும், சற்குரு நூல்களிலும் சிரத்தை கொள்ளுதல் மூன்றாம் சாதனத்தின் பகுதி ஆறனுள் மிகமிக இன்றியமையாததாகும். இதுபற்றித்தான் சிரத்தையை இறுதியாகக் கொண்டு கைவல்ய நவநீதத்தில் வற்புறுத்தப்பட்டது. விசார சாகரம் எனும் நூல், சமம், தமம், சிரத்தை, சமாதானம், உபராமம், திதிட்சை என்று முறைப்படுத்திக் கூறியிருக்கவும், விவேக சூடாமணி என்னும் நூல், சமம், தமம், உபரதி, திதிட்சை, சிரத்தை, சமாதி என்று முறைப்படுத்திக் கூறியிருக்கவும், கைவல்ய நவநீதம் எனும் தமிழ் முதல் நூல், சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை எனச் சிரத்தையை இறுதியில் வைத்து முறைப்படுத்தியிருப்பது, அச்சிரத்தையானது ஏனையவற்றிலும் மிகமிக இன்றியமையாதது என்னும் கருத்தை வலியுறுத்தவே ஆகும்.

ஒரு மரத்தின் எல்லா உறுப்புக்களுள்ளும் அதன் பழமே மேம்பட்டதுபோல, முக்திநெறிக்கு உரிய எல்லாப் பயிற்சி வகைகளிலும், மறைமொழிகளிலும், சற்குரு மொழியிலும் அக்கறை கொள்ளும் சிரத்தையே மேம்பட்டதாகும். மரத்தில் காய் காய்த்தபிறகு, அஃது உண்பதற்கு ஏற்ற பழமாகப் பக்குவ நிலையைத் தவறாமல்

அடைந்து நிற்பது போலச் சிரத்தை ஏற்பட்ட பிறகு, அதன் கனிவாய் மோட்சத்தை அடைவதற்கு உரிய பக்குவநிலை அல்லது இச்சை உண்டாய் விடுகின்றது.

மோட்ச இச்சையை முமுட்சுத்துவம் என்பர். சிரத்தைக்குப் பின்பே அடுத்த சாதனம் அல்லது கருவியான முமுட்சுத்துவம் தொடங்கும்.

மறைமொழிகளிலும், குருமொழிகளிலும், ஏனைய பெரியோர் மொழிகளிலும் உண்டாகும் சிரத்தையானது, இறைவன், குரு, பெரியோர் இவர்களிடத்துப் பக்தியில்லாமல் உண்டாவதில்லை. ஆதலால், பக்தியை முன்னிட்ட சிரத்தை மிகமிக மேம்பட்டதாம் என்று கொள்வதில் தவறொன்றுமில்லை.

“பரமசற் குருநூலன்பு பற்றலே சிரத்தையாகும்”, என்பது சிரத்தை என்பதன் இலக்கணத்தைக் கைவல்ய நவநீதம் உணர்த்தும் தொடராகும்.

சமம் முதலிய அறுவகைபட்ட பயிற்சிகளையும் ஒரே சாதனமாகச் சமாதி ஷட்க சம்பத்தி அல்லது சமம் முதலிய ஆறன் அடைவு என்ற கொள்வதே வேதாந்த முணர்ந்த பெரியோர் மரபாகும். அகக் கருவித் தடையாகிய சமத்தில் நீராடிப் புறக் கருவித் தடையாகிய தமத்தை உடுத்து, செய்தொழில்களில் பற்று விடுதலாகிய உபராமத்தை அணிந்து, பசி நீர்வேட்கை முதலியவற்றைப் பொறுத்துக்கொள்ளுதலாகிய திதிட்சையைப் பூண்டு, மறைமொழி குருமொழிப் பொருள்களைச் சித்தம் சிந்திக்குமாறு செய்தலாகிய கைவிளக்குடன் பரம சற்குரு நூலன்பு பற்றலாகிய நெறி செல்வார் மோட்சமென்னும் பெருநிதியாகிய வீடு பேற்றில் இச்சை கொண்டு முத்திநெறியே சென்று அதனைத் தவறாது அடைவர் ஆதலின், ஆறுவகைப்பட்ட சமம் முதலிய பயிற்சிகளை ஒரு கோவையாகக் கொண்டு ஒரே சாதனமாகக் கொண்டனர் நமக்கு வழிகாட்டிகள் எனலாம்.

முமுட்சுத்துவம் :—

முமுட்சுத்துவம் என்பது முத்திநெறி செல்லுதற்கு உரியார் கொள்ளுவதற்கு உரிய நான்காம் சாதனம் அல்லது கருவியாகும். முமுட்சுத்துவம் என்பது மோட்சம் அல்லது முத்தி அல்லது வீட்டில் இச்சை என்று பொருள்படும் என்று முன்னும் கூறினோம். மோட்சம், வீடு, விடுதலை என்பன ஒரே பொருளை உணர்த்தும் சொற்களாகும். வீடாவது எல்லாவகையான பற்றுக்களும் நீங்கிய நிலை. அந்த நிலையே எல்லா இன்பமும் எய்தும் பேரின்ப நிலையு

மாகும். சிறிதுகூடத் துன்பம் கலவாத முழுமையான இன்பநிலையே வீடு எனப்படும். எவ்வளவுதான் செல்வம் உடையவர் ஆனாலும் எவ்வளவுதான் பட்டம் பதவி முதலிய செல்வாக்கு உடையவ ராலாலும் அவர், ஒரு சிறிது துன்பம் உறுவாரானால் அவற்றா லெல்லாம் எவ்வளவுதான் இன்பம் எய்தியிருந்த போதினும் கவலை யில் மூழ்குவர். அவர் பெற்ற அவ்வளவு இன்பமும் நிறைந்த இன்பமாகத் தோன்றாது. மேலும் செல்வமோ, பட்டம் பதவியோ நிலைத்து நிற்பதில்லை. அவை நீங்கிய விடத்துத் துன்பம் அளவில்லாமல் உண்டாகும். எனவே, அழியாத, மாறாத, துன்பம் சிறிது கூடக் கலத்தல் இல்லாத முழுப் பேரின்ப நிலையை அடையவே எவரும் விரும்புவர். ஆனால், அதில் விருப்பம் செல்வது பேரின்பமே வடிவமான வீட்டின் இயல்பை அறிந்தவர்க்கே ஆம். மேலே கூறிய சாதனங்களில் பயிற்சியுடையார் வீடுபேற்றில் மாறாத இச்சை கொள்வர். அந்த இச்சையில் மாறாத நிலை யுடைமையே முமுட்சுத்துவம் எனப்படும்.

"முத்தியை விரும்பும் இச்சை" என்பது முமுட்சுத்துவத்தின் இலக்கணத்தைக் கைவல்ய நவநீதம் உணர்த்தும் தொடராகும்.

பிறசாதனங்கள் :

விவேகம் முதலிய நான்கு சாதனங்களோடு, கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற மூன்றும், மஹாவாக்கியப் பொருள் விசாரமும் முத்திநெறியாகிய மெய்யுணர்வு நெறியைக் கடைப் பிடித்தற்கு உரிய சாதனங்களாகும். இந்த எட்டுவகைச் சாதனங் களும் முத்திநெறிக்கு உரிய அகக்கருவிகளாம். அகக்கருவிகளை வடநூலார் அந்தரங்க சாதனங்கள் என்பர். கேட்டலில் அல்லது மெய்யுணர்வு பெறுதலில் எது காட்சி (பிரத்தியட்ச)ப் பலமா யுள்ளதோ, அஃது அகச்சாதனம் அல்லது அந்தரங்க சாதனம் ஆம். விவேகம், வைராக்கியம், சமம் முதலிய ஆறன் அடைவு, முத்தி விருப்பம் ஆகிய நான்கும் கேட்டற்கு உதவியாய் உள்ளவை. எவ்வாறு எனின், விவேகம் முதலிய இல்லாத வெளிநாட்டம் உடையவனுக்குக் கேட்டல் எண்ணம் ஏற்படுவதில்லை. கேட்டல், சிந்தித்தல், தெளிதல் மூன்றும் மெய்ப்பொருள் உணர்வு பெற உதவியாய் உள்ளவை. கேட்டல் முதலியன இன்றி, மெய்ப்பொருள் உணர்வு உண்டாதல் இல்லை. அவ்வாறே, "மஹா வாக்கியங் களாகிய, 'அது நீ' முதலானவற்றில், 'அது' என்பதன் உண்மைப் பொருள் யாது ? 'நீ' என்பதன் உண்மைப் பொருள் யாது ?" என்ற உணர்வு உண்டாதல் இல்லாது போனாலும் வேறுபாடற்றிருத்தலாகிய உணர்வு உண்டாதல் இல்லை. எனவே,

விவேகம் முதலிய நான்கும், கேட்டல் முதலிய மூன்றும், மஹாவாக்கியப் பொருள் ஆராய்ச்சியும் மெய்ப்பொருள் உணர்தற்கு உதவியாக உள்ளவை. ஆகவே, இந்த எட்டுச் சாதனங்களும் முத்திநெறி அல்லது மெய்ப்பொருள் உணர்வு நெறிக்கு அகச் சாதனங்கள் ஆவனவாம்.

எது மெய்ப்பொருளுணர்வில் அல்லது கேட்டலில் காட்சி (பிரத்தியட்ச)ப் பலமாயில்லாமல், அகக்கருவியின் தூய்மை மாத்திரத்தில் பலமாயுள்ளதோ, அது முத்தி நெறிக்கு உரிய புறச் சாதனமாம். இத்தகையன, வேள்வி, தானம், தவம் முதலியன இயற்றுதலாம். நுணுகிப் பார்க்குமிடத்தில், வேள்வி முதலியன இயற்றுதல், பற்றிற்குக்காரணம் ஆதலால் அவற்றால் அகக்கருவியின் தூய்மை உண்டாகும் என்று கூறுவதற்கு இல்லை. ஆனால், விருப்பு, வெறுப்பு உடையவனுக்கு அவை பற்றுண்டாக்குவதற்குக் காரணமாய், அவை இல்லாதவனுக்குப் பற்று உண்டாக்க மாட்டாதனவாய் இருத்தலால், பிற கூறப்பட்டவனுக்கு அவை அகக்கருவியின் தூய்மைக்குக் காரணம் ஆதல் உணரலாம்.

அகக்கருவியாம் அகச்சாதனத்தை அந்தரங்க சாதனம் எனல், போலப் புறக்கருவியாம் புறச் சாதனத்தைப் பஹிரங்க சாதனம் என வடநூலார் கூறுவர்.

வேள்வி முதலிய கர்மங்களிலும், மனைவி, மக்கள், மனை, பொருள் முதலியவற்றிலும் பற்று விட்டவன் மெய்யுணர்வு பெறுதற்குத் தகுதியுடையவன் ஆவான். மனைவி, மக்கள் முதலியவற்றில் பற்றுவிட வேண்டும் என்பதால், அவர்களை விட்டுவிட வேண்டும் என்று கூறவில்லை என்பதை நினைவில் இருத்தல் வேண்டும். இவ்வாறு நினைவில் கொள்ளாமல், முத்திநெறி கூறும் நூல்கள் மனைவியை விடு, மக்களை விடு என்று கூறுகின்றன என்று தவறாகக் கொண்டு அந்நூல்களை இகழ்வர்.

மெய்ப்பொருள் உணர்விற்கு இன்றியமையாத அந்தரங்க சாதனம்

நன்றாக ஆராய்ந்து பார்த்தால், மெய்ப்பொருளுணர்விற்கு இன்றியமையாத அந்தரங்க சாதனம் அல்லது அகக்கருவி, 'அதுநீ', என்பது முதலாகக் கூறப்படும் மஹாவாக்கியங்களின் பொருளுணர்வு ஆகும். எனவே, கேட்டல் முதலியன, இன்றியமையாத அகச்சாதனங்கள் ஆகா.

கேட்டல் என்பது யாது? மறைமுடிவுகள் கூறும் வாக்கியப் பொருளின் உண்மைக் கருத்து இன்னது என்று அறிந்தோரிடம் கேட்டு யுக்தியால் உறுதி செய்வதே கேட்டல் எனப்படும்.

சிந்தித்தல் என்பது யாது? உயிர், இறைவன் என்ற இரண்டு பொருள்களின் ஒன்றாம் தன்மையில் சார்பாகவும், வேறாம் தன்மையில் சார்பின்றியும் செய்யப்படும் யுக்திகளால் தனக்கு வேறாகாத (தனக்கு வேறாக இரண்டாவது ஆன பொருள் அல்லாத) கடவுளை இடைவிடாது நினைத்தலே சிந்தித்தல் எனப்படும்.

தெளிதல் என்பது யாது? உடலே நான் என்ற எண்ணத்தால் தான்வேறு உடல்வேறு என்று அறிய மாட்டாத அறியாமை என்ற மறைப்புச் சிறிதும் இல்லாது, கடவுள் ஒன்றே எங்கும் நிறைந்தது அதுவேதான் என்று உறுதிகொண்டு, விடாது நிலைத்து நிற்பதே தெளிதல் எனப்படும்.

தெளிவின் பக்குவநிலையே சமாதி என்று சொல்லப்படும். எனவே, சமாதியும் தெளிவில் அடக்கம் ஆகும்; வேறு சாதனம் ஆகாது.

கேட்டல் முதலிய மூன்றும் மெய்ப்பொருளுணர்விற்கு நேரான சாதனங்கள் அல்ல; புத்தியின் குற்றமாகிய ஐயந்திரிபுகளின் அழிவிற்குக் காரணங்களாம். ஐயத்தை அசம்பாவனை என்றும், திரிபை, விபரீத பாவனை என்றும் வடநூலார் கூறுவர்.

கேட்டலால், அறிவு நூல்களில் உண்டாகும் ஐயம் நீங்கும். "அறிவு நூல் வாக்கியங்களான வேதாந்த வாக்கியங்கள், இரண்டாவதற்ற பெரிய பொருளை (பிரம்மத்தை) உணர்த்துகின்றனவா? வேறு பொருளை உணர்த்துகின்றனவா?" என்று இவ்வாறு அறிவு நூலில் உண்டாகும் ஐயம் கேட்டலால் நீங்கும். ஒன்றை அறிந்து கொள்வதற்குக் கருவியான நூலைப் பிரமாண நூல் என்று வடமொழியாளர் கூறுவர்.

சிந்தித்தலால், அறிபடுபொருளில் உண்டாகும் ஐயம் நீங்கும். "உயிர் (ஜீவன்), இறை (பிரம்மம்) இவற்றிடை வேற்றுமையின்மை உண்மையா, வேற்றுமை உண்மையா?" என்று இவ்வாறு அறிபடு பொருளில் (பிரமேயத்தின்கன்) உண்டாகும் ஐயம் சிந்தித்தலால் நீங்கும்.

"உடல் முதலியவைகளும் அழியாத பொருள்கள் உயிர் இறைகளில் வேறுபாடும் உண்மையேயாகும்" என்று கொள்ளும் கொள்கையைத் திரிபுணர்ச்சி என்பர். இதனையே விபரீத பாவனை எனறும் விபர்யயம் என்றும் வடநூலார் கூறுவர். இத்திரிபுணர்ச்சியைத் தெளிதல் நீக்கும்,

இவ்வாற்றால், கேட்டல் முதலிய மூன்றும், ஐயம் திரிபு உணர்ச்சிகளை நீக்கும் கருவிகள் எனலாம். ஐயம் திரிபு உணர்ச்சிகள் மெய்ப் பொருளுணர்விற்குத் தடைகளாம். எனவே, மெய்ப்பொருளுணர்விற்குத் தடைகள் நீக்குதல் வாயிலாகக் கேட்டல் முதலியவை மெய்ப் பொருளுணர்விற்குக் காரணமாதலால், அவை மெய்ப்பொருளுணர்விற்கு அந்தரங்க சாதனங்கள் எனப்படும் அகக் கருவிகள் அல்ல என்பது விளங்கும்.

மெய்ப்பொருளுணர்விற்கு இன்றியமையாத அந்தரங்க சாதனம் செவியொடு நெருங்கிய அறிவுநூல் வாக்கியம் ஆகும்.

அறிவுநூல் வாக்கியமும், அவாந்தர வாக்கியம், மஹா வாக்கியம் என இருவகைப்படும். ஒரு பொருளின் இயல்பை இன்னது என்று உணர்த்துவது அவாந்தர வாக்கியமாகும். அப் பொருளை ஒருவன் தான் உள்ளவாறு உணர்ந்த தன்மையை உணர்த்துவது மஹா வாக்கியம் ஆகும்.

கடவுள் உண்டு என்ற வாக்கியம் அவாந்தர வாக்கியம் ஆம். கடவுளாக நான் இருக்கிறேன் என்ற வாக்கியம் மஹாவாக்கியம் ஆம். கடவுள் உண்டு என்றபோது, கடவுள் உண்டு என்ற உணரும் உணர்வு; கண்ணாலோ, கருத்தாலோ அறியும் அறிவு ஆகாது. கடவுளாக நான் இருக்கிறேன் என்றபோது உண்டாகும் உணர்வு, கருத்தால் ஒருவன் தானே உணரும் உணர்வாகும். நான் கடவுளாக இருக்கிறேன் என்ற உணர்வு அபரோட்ச ஞானம் அல்லது கண்டுணர்ந்த உணர்வு எனப்படும். கடவுள் உண்டு என்று உணரும் உணர்வு பரோட்சஞானம் அல்லது காணாத அறிவு எனப்படும். செவியொடு சம்பந்தப்பட்ட அவாந்தர வாக்கியம் பரோட்ச ஞானத்திற்கு ஏதுவாம்; செவியொடு சம்பந்தப்பட்ட மஹாவாக்கியம் அபரோட்ச ஞானத்திற்கு ஏதுவாம். மஹா வாக்கியத்தால், அனைவருக்கும் அபரோட்சம் அல்லது பிரத்தியட்ச உணர்வே உண்டாகும். எனவே, மெய்ப்பொருள் உணர்விற்கு இன்றியமையாத அந்தரங்க சாதனம் என்று மஹாவாக்கியப் பொருளுணர்வு கூறப்பட்டது; மற்றவைகள் பஹிரங்க சாதனங்கள் எனப்பட்டன.

மெய்ப்பொருளுணர்விற்கு மஹாவாக்கியப்பொருளுணர்வு ஒன்றே போதுமா?

"கேட்டல், சிந்தித்தல், தெளிதல் இவற்றொடு கூடிய மஹா வாக்கியப் பொருளுணர்வால்தான், அதுவே (கடவுளே) நான் என்று, கண்டுணரும் உணர்வு (அபரோட்சஞானம்) ஏற்படும். தனிப்பட்ட மஹாவாக்கியப் பொருளுணர்வால், அதற்கு (கடவுளுக்கு) வேறாக

இல்லாமல், அதுவே, தானாக இருத்தலாகக் குறிக்கொள்ளும் உணர்வு (பரோட்சஞானம்) தான் ஏற்படும். கண்டுணரும் ஞானமான அபரோட்ச ஞானம் ஏற்படாது", என்று பெரும்பான்மை யோர் கூறுவர்.

காட்டுப்பசுவைக் காணாத ஒருவன், அஃது எப்படியிருக்கும் என்று அறிந்த ஒருவனைக் கேட்டால், ''வீட்டுப் பசுவைப் போலத்தான் அஃது இருக்கும்; ஆனால் வீட்டுப்பசுவிற்குக் கழுத்தில் தொங்கும் அலைதாடி, காட்டுப் பசுவிற்கு இராது'', என்று அவன் கூறுவன். இதைக் கேட்டவனுக்கு ''காட்டுப்பசு இப்படி இருக்கும்'' என்ற ஒருவகை உணர்வு கருத்தில் உண்டாகின்றது. அந்த உணர்வையே கருத்தினால் கொள்ளும் உணர்வு (பரோட்ச ஞானம்) என்பர். காட்டுப் பசுவை நேராகக் காட்டி, "இதுதான் காட்டுப்பசு" என்று கூறினால், தெளிவான காட்சி உணர்வு உண்டாகின்றது. இந்த உணர்வையே கண்டுணரும் உணர்வு (அபரோட்ச ஞானம்) என்பர்.

கருத்தினால் கொள்ளும் உணர்வால் ஐயந்திரிபு அற்ற தெளிவு ஏற்படாமல் போகலாம். கண்டுணரும் உணர்வால் ஐயந்திரிபு அற்ற தெளிவு திண்ணமாக ஏற்படும்.

கருத்தினாற் கொள்ளும் உணர்வினைச் சுருக்கமாகக் **கருத்துணர்வு** என்றும், கண்டுணரும் உணர்வினைச் சுருக்கமாகக் **கண்ணுணர்வு** என்றும் வழங்கலாம்.

"தனிப்பட்ட மஹாவாக்கியப் பொருள் உணர்வால் கண்ணுணர்வு உண்டாகுமானால், கேட்டல் முதலியன பயனற்றன ஆகும். எனவே, கேட்டல் முதலியவற்றொடு கூடிய மஹா வாக்கியப் பொருளுணர்வால்தான் கண்ணுணர்வு உண்டாகுமென்று கொள்ளுதல் வேண்டும்", என்பது மேற்குறித்தவர்களுடைய கருத்து.

ஆனால், உண்மையாக ஆராய்வோமானால், தனிப்பட்ட மஹாவாக்கியப் பொருள் உணர்வாலேயே கண்ணுணர்வு உண்டாகும் என்று தெளியலாம்.

''ஆயின், கேட்டல் முதலியன பயனற்றன ஆகுமே! ஆகவே, கேட்டல் முதலியவற்றோடு கூடிய மஹாவாக்கியப் பொருளால்தான் கண்ணுணர்வு உண்டாகும் என்று கொள்ளுதல் வேண்டும்.'' எனின், எந்தப் பொருள் மறைப்புடன் இருக்கின்றதோ, அந்தப் பொருளின் கருத்துணர்வே அதைக்குறிக்கும் வாக்கியத்தால் உண்டாகும். வாக்கியத்தால், மறைப்புடைய பொருளின், கண்ணுணர்வு ஒரு

வழியாலும் உண்டாக மாட்டாது. தேவருலகம், இந்திரன் முதலிய தேவர்கள் பற்றிய உணர்வு, நூல்கள் வாயிலால், கருத்துணர் வாகவே உண்டாகும் ; கண்ணுணர்வாக உண்டாகவே மாட்டாது.

எந்தப் பொருள் மறைப்பின்றி இருக்கின்றதோ, அந்தப் பொருளின் கருத்துணர்வு, கண்ணுணர்வு, இரண்டும், வாக்கியத் தால் உண்டாகும்.

ஓர் அறையில் பத்துப் பேர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம், அவர்களில் ஒருவர், நம்பியார் என்ற பெயருடையவர் என்றும் வைத்துக் கொள்வோம். அவரை அறியாத ஒருவர், "நான் நம்பியாரைக் கண்டதில்லை. அவரை நான் காண வேண்டும்" என்று தம் பக்கத்தில் இருக்கின்ற ஒருவரைக் கேட்டால், அவர், 'நம்பியார் இங்கேயே இருக்கிறார்" என்று சொன்னால், கேட்டவருக்கு, நம்பியார் அங்கே இருக்கிறார் என்ற கருத்துணர்வு ஏற்படும் என்பதில் ஐயமில்லை. கேட்டவருக்கு எதிரே, அவர் கண்ணிற்கும் மறையாமல் நம்பியார் இருக்கிறார் என்றாலும், அவருக்குக் கருத்துணர்வு மட்டுந்தான் ஏற்படும் ; கண்ணுணர்வு ஏற்படாது. ஆனால், "இவர் தாம் நம்பியார்", என்று அவரைச் சுட்டிக் காட்டியவுடன், கேட்டவருக்கு நம்பியாரின் கண்ணுணர்வு ஏற்படுகின்றது. எனவே, மறைப்பு இல்லாத பொருள் யாதாயினும், கருத்துணர்வும், கண்ணுணர்வும் வாக்கிய உணர்வாலேயே உண்டாய்விடும் ; வேறு பிறவற்றின் துணை தேவையே இல்லை.

கடவுள் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருப்பதால் அவர் மறைப்பே இன்றிய பொருள் ஆவார். "கடவுள் உண்டு ; கடவுள் யாண்டும் நிறைந்தவர் ; கடவுள் எல்லா ஆற்றலும் உடையவர்" என்ற வாக்கியங்களைக் கேட்பவர்க்குக் கடவுள் உண்டு ; அவர் இப்படிப்பட்டவர் என்ற கருத்துணர்வு ஏற்படுகின்றது.

கேட்பவருடைய உயிர் வடிவமாகவே கடவுள் இலங்குகின்றார் என்று மஹாவாக்கியம் உணர்த்தினால், கேட்பவருக்குக் கண்ணுணர்வுஉண்டாய் விடுகின்றது. எனவேயாண்டும் நிறைந்து, மறைப்புச் சிறிதும் இல்லாத கடவுளும் தானும் வேறின்றி யிருப்பதுணரும் கண்ணுணர்வு மஹாவாக்கியப்பொருள் உணர்வு ஒன்றால் மட்டுமே உண்டாய் விடுகின்றது என்பதில் தடை ஒன்றும் இல்லை.

"எதனது கண்ணுணர்வு உண்டாகுமோ, அதண்கண் ஐயம் திரிபுகள் உண்டாக மாட்டா ; அதனால் கேட்டல் முதலியன பய னற்றன", என்று கூறுவது பொருந்தாது.

மஹாவாக்கியப் பொருளைக் கேட்பவர் புத்தியில், ஐயம் திரிபு களால் ஆகிய பழைய குற்றங்கள் முன்னரே இருப்பின், மஹா வாக்கியப்பொருளுணர்வு, அக்குற்றங்களின் கூட்டுறவால், உடனே தெளிவான கண்ணுணர்வினை உண்டாக்கி விடமாட்டாது. எனவே அக்குற்றங்களின் நீக்கத்தின் பொருட்டுக் கேட்டல் முதலிய பயிற்சிகள் செய்தல் வேண்டும்.

பழைய குற்றங்கள் இல்லாத தெளிவான புத்தியுடையவருக்கு மஹாவாக்யப் பொருளுணர்வு ஒன்றே போதும். தெளிவான கண்ணுணர்வு, அவர்கட்கு மஹாவாக்யப் பொருளுணர்வு ஒன்றால் மட்டுமே உண்டாய்விடும். அவர்கட்குக் கேட்டல் முதலியன தேவையில்லை.

எனவே, ஐயந்திரிபுகளான பழைய குற்றங்கள் பொருந்திய புத்தியுடையவர்க்குக் கேட்டல் முதலாகிய சாதனங்களுடன் கூடிய மஹாவாக்கியப்பொருள் உணர்தலாகிய சாதனம் வேண்டும். பழைய குற்றங்கள் இல்லாத புத்தி உடையவர்க்குத் தனிப்பட்ட மஹா வாக்கியப் பொருள் உணர்தலான சாதனம் ஒன்றே போதும் என்பது முடிந்த முடிபாகும்.

இதுகாறும் கூறியவாற்றுல்,விவேகம் முதலிய நான்கு சாதனங் களொடு, கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற மூன்றும், மஹா வாக்கியப்பொருள் விசார உணர்வும், முத்திநெறியாகிய மெய் யுணர்வு நெறிக்கு உரிய சாதனங்களாம் என்பன ஓர்ந்து அவற்றைக் கடைப்பிடித்தல் வாயிலாக முக்திநெறி சென்று, முத்தியாகிய வீடு பேற்றின்பத்தைப் பெற்றுய்வது, மக்கட்பிறப்பு எடுத்தவர்கள் செய்யும் இன்றியமையாத செயலாகும் என்பது தெளிவாம்.

அறிவியல் பண்ணை

தமிழரின் ஒலியியலறிவு

பழந்தமிழர் ஒலிகளை முதல், சார்பு என வகுத்துப் பயன் படுத்திய முறை மிகச் சிறந்தது என்று ஒலியியல் அறிஞர்கள் இன்று உணர்ந்து போற்றுகின்றனர். அடிப்படை ஒலிகளாக வும் பொருளுணர்ச்சிக்கு இன்றியமையாதனவாகவும் உள்ளவற்றை மட்டுமே தமிழர் ஒலியெழுத்துக்களாகக் கொண்டனர். அந்தந்த மொழிக்குரிய முதலொலிகளை (Phonemes) மட்டும் ஆராய்ந்து அவற்றிற்கு ஏற்ற வரி வடிவங் களை அமைத்துக் கொண்ட முறை இந்திய நாட்டு மொழி களில் காணப்படும் சிறப்பாகும் என்று ஐரோப்பியரும் அமெரிக்கரும் பாராட்டுகின்றனர்.

மு வ., மொழிநூல் (1983) பக். 10-11.

இருதய நோய்க்கு ஐஸ் துண்டு அறுவை சிகிச்சை

இருதயம் இயல்பாக ஒரு மணித்துளிக்கு 70 முறை துடிக்கிறது. இதன் வேகம் கூடி, மணித்துளிக்கு 250 முறை துடிக்கும்போது, அதனால் ஒரு வகை இருதய நோய் ஏற்படுகிறது. இந்த மிகைவேகத்துடிப்பை இயல்பான நிலைக்குக் கொண்டுவர ஐஸ் துண்டைப் பயன்படுத்துகிறார் நியூ ஜெர்சியைச் சேர்ந்த டாக்டர் லாரன்ஸ் கெஸ்மன்.

அதிகமாகத் துடிக்கிற இருதயப் பகுதியைக் கண்டுபிடிக்க இந்த ஐஸ் துண்டு உதவுகிறது. இருதயப் பகுதியில் இந்த ஐஸ் துண்டைக் கொண்டுசெல்லும்போது, எந்த இடம் அதிகமாகத் துடிக்கிறதோ அது உடனே குளிர்ச்சி அடைந்து, வேகம் தடைப்பட்டு, இயல்பான துடிப்பளவுக்கு வந்து விடுகிறது. நோயும் குணமாகிறது. இந்த அறுவைச் சிகிச்சை எளிமை யானதாகவும், பயனுள்ளதாகவும், அதிகச் செலவு இல்லாததாகவும் இருக்கிறது.

புற்று நோயைத் தவிர்க்க உதவும் உணவு முறை

புற்றுநோய் (கான்சர்) மிகக் கொடிய நோய் என்பது அனைவரும் அறிந்ததே. இந்நோய்க்கு ஆளாகி அமெரிக்காவில் மட்டும் ஆண்டொன்றுக்கு 450,000 பேர் இறக்கிறார்கள்,

இவர்களுள் நுரையீரல் புற்றுநோயால் இறப்பவர் தொகை 120,000 என்று கணக்கிடப்பட்டுள்ளது. மார்புப் புற்றுநோயால் 40,000 பேர் இறந்துபோகிறார்கள். இதைத் தடுக்க, பத்திய உணவு முறை ஒன்றை அமெரிக்கப் புற்று நோய்க்கழகம் பரிந்துரைத்துள்ளது.

1. கொழுப்புச் சத்துணவைக் குறைக்க வேண்டும்.

2. பழங்கள், காய்கறிகள் நிறைய உண்ண வேண்டும்.

3. வைட்டமின் ஏ,சி நிறைந்த உணவுப் பொருட்களை (தக்காளி, எலுமிச்சை, நார்த்தை, முட்டைக்கோஸ், முட்டை, ஈரல், காலிபிளவர்) அதிகம் உட்கொள்ள வேண்டும். ஏ,சி வைட்டமின் போதிய அளவு நமது உணவில் சேர்த்துக் கொள்ளப்படாவிடில் புற்றுநோய் ஏற்படலாம்

4. குடிப்பழக்கத்தைக் குறைக்க வேண்டும்.

5. உப்பைக் குறைத்துக் கொள்ளலாம்.

6. ஒரு நேரத்தில் குறைந்த அளவே உண்ண வேண்டும்.

மலடியும் பிள்ளை பெறலாம் - அறிவியலின் அற்புதம்

மலடி பிள்ளை பெறமுடியுமா ? முடியும் என்று அறிவியல் கூறுகிறது. திருமணமான, 25 வயதுள்ள ஆஸ்திரேலியப் பெண் ஒருத்திக்கு முதிர்ச்சி பெறா நிலையிலேயே மாத விலக்கு நின்று விட்டது. கருப்பை செயல்படுவதும் நின்றுவிட்டது. ஆனால் அவளுக்கோ குழந்தை வேண்டும் என்று தணியாத ஆசை, அப்போது மற்றொரு பெண் தனது முட்டையைத் தானம் செய்தாள். அந்த முட்டையையும் குழந்தையை விரும்பிய பெண்ணின் கணவனது விந்தையும் சோதனைக் குழாயிலிட்டுக் கருவளம்பெறச்செய்து, பின்னர் அதனை அந்த மகப்பேறு வேண்டிய பெண்ணின் கருப்பையில் வைத்தனர். அந்தப் பெண்ணும் இயல்பான சாய்மைப்பேறு அடைந்து, குழந்தையையும் பெற்றெடுத்தாள்.

அறிவியலின் அற்புதத்தை என்னென்பது ?

நன்றி : அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்.

தமிழ் ஆங்கில மொழிகளில் பெயரெச்சத் தொடர்கள்

வீ. ரேணுகாதேவி

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

1.0 தமிழ் ஆங்கில மொழிகளில் காணப்பெறும் பெயரெச்சத் தொடர்களில் விளக்கம், தொடரியல் பண்புகள், வகைகள், அவற்றுக்கிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள் ஆகியவற்றை ஆய்ந்தறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு வினையும் ஒரு பெயரும் சேர்ந்த முற்றாத் தொடர்கள் (Clauses) அல்லது தொடர்மொழிகள் (Phrases) பெயரெச்சத் தொடர்கள் (relative constructions) எனப்படும்.

1.1 தமிழில் பெயரெச்சத் தொடர்கள்

ஒரு எச்ச வினையும் (non-finite verb) ஒரு பெயரும் இணைந்து தமிழில் பெயரெச்சத் தொடர்கள் அமையப் பெறுகின்றன. இவ்வெச்சவினை எப்போதும் ஒரு பெயரெச்சமாக இருக்கும். பெயரெச்சத் தொடரில் வரும் எச்சவினை பெயருக்கு முன்னிடத்ததாக அமைந்து பெயரினைச் சிறப்பித்து வருகின்றது. பெயரெச்சத் தொடர் தமிழில் தொடர்மொழியாக அமைந்துள்ளது.

1.1.1 பெயரெச்சத்தொடர்களின் தொடரியல் பண்புகள்

1. பெயரெச்சத்தொடரின் முதல் உறுப்பாகிய வினை தமிழில் ஒரு எச்சவினையாக அமைந்துள்ளது இவ்வெச்சவினையின் அண்மையுறுப்பு ஒரு பெயராக அமையப்பெறும்.

நாட்டியம் ஆடிய சிறுமி
பள்ளிக்குச் சென்ற மாணவி

2. தமிழ்மொழியில் ஆங்கிலத்தைப் போன்று பெயரெச்சத் தொடரில் தலைமைப் பெயர்கள் இணைப்புப் பெயர்களைச் (ஒ பா. 1. 2. 1. 2) சுட்டுவதில்லை.

3. பெயரெச்சதொடரிலுள்ள எச்சவினை ஒரு குறிப்பிட்ட காலப் பொருண்மையினை உணர்த்தும் வகையில் அமையும்.

நடந்து வந்த பையன்
நடந்து வருகின்ற பையன்
நடந்து வரும் பையன்

4. தமிழில் பெயரெச்சத்தொடரே பெயர்த்தொடரின் (noun phrase) ஒரே உறுப்பாக அமைந்துள்ளது.

5. ஒரு தலைமைப் பெயரின் பண்பினைச் சுட்டும் வகையில் ஒன்றிற்கும் மேற்பட்ட எச்சவினைகள் அடுக்கி வருதலைத் தமிழ் மொழியின்கண்ணுள்ள பெயரெச்சத் தொடர்களில் காண முடிகின்றது.

சிவப்பாக இருக்கிற கனிந்த பழுத்த பழம்
கோபமாக இருக்கிற உயர்ந்த விரிந்த பரந்த மனம்.

1.1.2 பெயரெச்சத்தொடர்களின் வகைகள்

1.1.2.1 தமிழிலுள்ள பெயரெச்சத்தொடர்களில் வரும் எச்சவினைகள் தலைமைப் பெயருக்கு முன்னால் வருவதால் இப் பெயரெச்சத்தொடர்கள் முன்எழுவாய்ப் பெயரெச்சத்தொடர்கள் (prenominal relative constructions) வகையைச் சாரும்.

1.1.2. 2. பெயரெச்சத்தொடரின் எச்சவினைக்கும் தலைமைப் பெயருக்குமிடையே காணப்பெறும் இலக்கண உறவின் அடிப்படையில் தமிழிலுள்ள பெயரெச்சத்தொடர்களை நிரப்பியுடை பெயரெச்சத்தொடர்கள் (complement relative constructions) நிரப்பியில்லா பெயரெச்சத்தொடர்கள் (non-complement relative constructions) என இரண்டு வகையாகப் பாகுபாடு செய்யமுடியும்.

1.1 2 2.1 நிரப்பியுடை பெயரெச்சத்தொடர்கள்

நிரப்பியுடைய் பெயரெச்சத்தொடர்களில் தலைமைப்பெயர் எச்சத்தின் முற்றுவினை வரும் வாக்கியத்தின் புதை வடிவில் அமைவதில்லை. ஈண்டுத் தலைமைப் பெயரையும், எச்சவினையை யும் இணைக்க 'என்ற' என்னும் நிரப்பி (complementizer) பயன் படுத்தப்படுகின்றது. சில சமயம் இந்நிரப்பி பெயரெச்சத்தொடரின் புறவடிவில் நீக்கம் பெற்று வருதலும் உண்டு.

கண்ணன் வந்த செய்தி < கண்ணன் வந்தான் என்ற செய்தி < கண்ணன் வந்தான். அது செய்தி.

இப்பெயரெச்சத்தொடரில் வரும் 'செய்தி' என்னும் தலைமைப் பெயர் எச்சத்தின் முற்றுவினை வரும் வாக்கியத்தினுள்ளே அமையவில்லை. இத்தலைமைப்பெயர் பெயரெச்சத்தொடரில் 'என்ற' என்னும் நிரப்பியால் வினையுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆதலின் இவை நிரப்பியுடை பெயரெச்சத்தொடர்கள் எனப்படுகின்றன,

1.1.2.2.2. நிரப்பியில்லாப் பெயரெச்சத்தொடர்கள்

நிரப்பியில்லாப் பெயரெச்சத்தொடரில் தலைமைப்பெயர் புதை வடிவில் வாக்கியத்தினுள்ளே அமைந்து இருக்கும்.

இராமன் வாங்கிய பொருள் < இராமன் பொருளை வாங்கினான்

விளையாடிய குழந்தை < குழந்தை விளையாடியது.

இப்பெயரெச்சத் தொடர்களில் வரும் 'பொருள்', 'குழந்தை' என்னும் தலைமைப் பெயர்கள் புதையமைப்பில் வாக்கியத்தினுள் அமைந்துள்ளன. தலைமைப் பெயரையும் எச்சவினையையும் இணைக்க நிரப்பி பயன்படுத்தப்படவில்லையாதலின் இப் பெயரெச்சத்தொடர்கள் நிரப்பியில்லாப் பெயரெச்சத்தொடர்கள் எனப்படுகின்றன.

பெயருக்கும் எச்சவினைக்கும் இடையே காணப்பெறும் வேற்றுமை உறவுகளின் அடிப்படையில் நிரப்பியில்லாப் பெயரெச்சத்தொடர்களை வேற்றுமை உறவுநிலைப் பெயரெச்சத் தொடர்கள் எனவும், வேற்றுமை உறவுநிலை இல்லாப்பெயரெச்சத் தொடர்கள் எனவும் இருவகைகளாகப் பாகுபாடு செய்யலாம்.

1.1.1.2.2.2. வேற்றுமை உறவுநிலைப் பெயரெச்சத் தொடர்

தலைமைப்பெயருக்கும் எச்சவினைக்குமிடையே வேற்றுமை உறவு காணப்படும் நிலையில் பெயரெச்சத்தொடர்கள் வேற்றுமை உறவுநிலைப் பெயரெச்சத்தொடர்கள் எனப்பெறுகின்றன. வெவ்வேறு வேற்றுமை உறவுகளின் அடிப்படையில், வேற்றுமை உறவுநிலைப் பெயரெச்சத் தொடர்களை எழுவாய்–பயனிலை உறவுப்பெயரெச்சத்தொடர், செயப்படுபொருள்-பயனிலை உறவுப் பெயரெச்சத்தொடர் கருவி-பயனிலை உறவுப்பெயரெச்சத்தொடர், கொடைப்பொருள்–பயனிலை உறவுப் பெயரெச்சத்தொடர் இடம் பயனிலை உறவுப் பெயரெச்சத்தொடர் என ஆறுவகைகளாகப் பகுத்துக்காணுதல் இயலும்.

1. எழுவாய் – பயனிலை உறவுப் பெயரெச்சத்தொடர்

பெயரெச்சத்தொடரின் தலைமைப் பெயருக்கும் எச்சவினைக்கும் இடையே எழுவாய் – பயனிலை வேற்றுமை உறவு அமையும் நிலையில் இப்பெயரெச்சத் தொடர்கள் எழுவாய் – பயனிலை உறவுப் பெயரெச்சத்தொடர்கள் எனப்படுகின்றன.

வசிக்கிற ராமன் < ராமன் வசிக்கிறான்

சிவந்த கண்கள் < கண்கள் சிவந்தன.

2. செயப்படுபொருள் - பயனிலை உறவுப் பெயரெச்சத் தொடர்

பெயரெச்சத் தொடரின் தலைமைப் பெயருக்கும், எச்ச வினைக்கும் இடையே செயப்படுபொருள் – பயனிலை வேற்றுமை உறவு அமையும் நிலையில் பெயரெச்சத்தொடர்கள் செயப்படுபொருள் – பயனிலை பெயரெச்சத்தொடர்கள் எனப்படுகின்றன.

அவன் கற்ற கல்வி < அவன் கல்வியைக் கற்றான்
சீதா சாப்பிட்டபழம் < சீதா பழத்தைச் சாப்பிட்டாள்.

3. கருவி – பயனிலை உறவுப் பெயரெச்சத்தொடர்

பெயரெச்சத்தொடரின் தலைமைப் பெயருக்கும் எச்சவினைக்கு மிடையே கருவி - பயனிலை வேற்றுமை உறவு அமையும் நிலையில் பெயரெச்சத்தொடர்கள் கருவி-பயனிலை உறவுபெயரெச்சத் தொடர்கள் எனப்படுகின்றன.

கண்ணன் எழுதிய பேனா < கண்ணன் பேனாவால் எழுதினான்
இராமன் வெட்டியகத்தி < இராமன் கத்தியால் வெட்டினான்.

4. கொடைப்பொருள் - பயனிலை உறவுப்பெயரெச்சத் தொடர்

பெயரெச்சத் தொடரின் தலைமைப்பெயருக்கும் எச்சவினைக்கு மிடையே கொடைப்பொருள் – பயனிலை வேற்றுமை உறவு அமையும் நிலையில் பெயரெச்சத் தொடர்கள் கொடைப்பொருள் – பயனிலை உறவுப் பெயரெச்சத் தொடர்கள் எனப்படுகின்றன

அவள் போன வீடு < அவள் வீட்டுக்குப் போனாள்
அவள் சென்ற திருமணம் < அவள் திருமணத்திற்குச் சென்றாள்.

5. நீங்கல்பொருள்-பயனிலை உறவுப் பெயரெச்சத் தொடர்

பெயரெச்சத்தொடரின் தலைமைப்பெயருக்கும் எச்சவினைக்கு மிடையே நீல்கல்பொருள்-பயனிலை வேற்றுமை உறவு அமையும் நிலையில் பெயரெச்சத்தொடர்கள் நீல்கல்பொருள் - பயனிலை உறவுப்பெயரெச்சத்தொடர்கள் எனப்படுகின்றன.

அவன் தப்பிய ஜெயில் < அவன் ஜெயிலிலிருந்து தப்பினான்
கீதா இறங்கிய வண்டி < கீதா வண்டியிலிலிருந்து இறங்கினாள்

6. இடம்-பயனிலை உறவுப்பெயரெச்சத்தொடர்

பெயரெச்சத்தொடரின் தலைமைப்பெயருக்கும் எச்சவினைக்குமிடையே இடம்-பயனிலை வேற்றுமை உறவு அமையும்நிலையில் பெயரெச்சத்தொடர்கள் இடம்-பயனிலை உறவுப்பெயரெச்சத் தொடர்கள் எனப்படுகின்றன.

அவன் சாப்பிட்ட கடை < அவன் கடையில் சாப்பிட்டான்
கீதா வசிக்கும் கோவை < கீதா கோவையில் வசிக்கிறாள்

1.1.2.2.2.2 வேற்றுமை உறவுநிலை இல்லாப் பெயரெச்சத்தொடர்கள்

வேற்றுமை உறவுநிலை இல்லாப் பெயரெச்சத்தொடரில் எச்சவினைக்கும் அது ஏற்கும் தலைமைப் பெயருக்குமிடையே வேற்றுமை உறவுநிலை காணப்படுவதில்லை. தலைமைப் பெயரின் பண்பினை அடிப்படையாகக் கொண்டு வேற்றுமை உறவுநிலை இல்லாப் பெயரெச்சத் தொர்டர்களை முறைமை வினையடை-பயனிலை பெயரெச்சத்தொடர் என்றும் அளவு-பயனிலை பெயரெச்சத்தொடர் என்றும்இருவகைபினவாகப்பாகுபாடு செய்யலாம்.

1. முறைமை வினையடை-பயனிலை உறவுப் பெயரெச்சத்தொடர்

முறைமை வினையடை-பயனிலை பெயரெச்சத்தொடரில் தலைமைப்பெயர் வாக்கியத்தின் புதைவடிவில் ஒரு முறைமை வினையடையாக அமைந்திருக்கும்.

அவள் ஆடிய அழகு < அவள் அழகாக ஆடினாள்
அனுமன் பாய்ந்த வீரம் < அனுமன் வீரமாகப் பாய்ந்தான்

இச்சான்றுகளில் 'அழகு', 'வீரம்' என்னும் தலைமைப்பெயர்கள் வாக்கியத்தின் புதைவடிவில் முறைமை வினையடைகளாகச் செயல்படுவதைக் காணமுடிகின்றது.

2. அளவு-பயனிலை உறவுப்பெயரெச்சத்தொடர்

அளவு-பயனிலை உறவுப்பெயரெச்சத் தொடரில் தலைமைப் பெயர் வாக்கியத்தின் புதைவடிவில் எச்சவினையோடு வேற்றுமை உறவுநிலையில் அமையாது அளவின் நிலையினைச் சுட்டும் வகையில் அமையப் பெற்றிருக்கும்.

கமலா ஓடிய தூரம் < கமலா (ஒரு குறிப்பிட்ட) தூரம் ஓடினாள்
சீதா எழுதிய அளவு < சீதா (ஒரு குறிப்பிட்ட) அளவு எழுதினாள்

'தூரம்' 'அளவு' என்னும் தலைமைப்பெயர்கள் ஒரு குறிப்பிட்ட அளவினைச் சுட்டும் வகையில் அமைந்துள்ளமையால் இப்பெயரெச்சத்தொடர்கள் அளவு–பயனிலை உறவுப்பெயரெச்சத்தொடர்களாக அமைந்துள்ளன.

1.1.2.3 தமிழ் மொழியிலுள்ள பெயரெச்சத்தொடர்களைப் பொருண்மை நிலையில் இனம்சுட்டும் பெயரெச்சத்தொடர் (restrictive relative construction) எனவும் இனம்சுட்டாப் பெயரெச்சத்தொடர் (Non-restrictive relative construction) எனவும் இருவகையாகப் பாகுபாடு செய்தல் இயலும்.

1.1.2.3.1 இனம்சுட்டும் பெயரெச்சத்தொடர்

பெயரெச்சத்தொடரின் தலைமைப்பெயர் எந்த சூழலில் அமையப்பெறுகின்றது என்பதனை எச்சவினை விளக்குமாயின் அப்பெயரெச்சத் தொடரினை இனம்சுட்டும் பெயரெச்சத்தொடர் எனலாம்.

மணியால் எழும் ஓசை
காற்றினால் விழுந்த மரம்.

ஈண்டு 'ஓசை' எதனால் எழுகின்றது என்பதனையும், 'மரம்', எதனால் விழுந்தது என்பதனையும் இத்தலைமைப் பெயர்களைச் சிறப்பித்து வரும் எச்சவினைகள் சுட்டுகின்ற வகையில் இவை இனம்சுட்டும் பெயரெச்சத்தொடர்களாகக் கருதப்பெறுகின்றன.

1.1.2.3.2 இனம்சுட்டாப் பெயரெச்சத்தொடர்

தலைமைப்பெயரின் சூழலை எச்சவினை வரையறுத்து வாரா நிலையில் பெயரெச்சத்தொடரினை இனம்சுட்டாப் பெயரெச்சத் தொடர் எனலாம்.

சூரியன் உதிக்கும் கிழக்குத் திசை.

மேலே கொடுக்கப்பெற்ற பெயரெச்சத் தொடரில் 'கிழக்குத் திசை' தலைமைப்பெயராகச் செயல்படுகின்றது. 'கிழக்குத்திசை' யில் சூரியன் உதிக்கின்றது; அதைப்போன்று சந்திரனும் உதிக்கின்றமையால் 'உதிக்கும்' எனும் எச்சவினை பொது நிலையில் அமைந்துள்ளது எனலாம். எச்சவினை பொது நிலையில் அமையப் பெறும்போது பெயரெச்சத்தொடர்கள் இனம்சுட்டாப் பெயரெச்ச தொடர்கள் எனப்படுகின்றன.

1.2 ஆங்கிலப் பெயரெச்சத்தொடர்கள்

ஆங்கிலத்தில் ஒரு முற்றுவினையும் (finite verbs) இணைப்புப் பதிலிப் பெயரும் (relative pronoun) இணைந்து பெயரெச்சத்

தொடர்கள் அமையப் பெற்றுள்ளன. பெயரெச்சத்தொடரில் வரும் முற்றுவினை பெயருக்குப் பின்னிடத்ததாக அமைந்து முற்றாத் தொடராகச் செயல்படுகின்றது.

1.2.1 பெயரெச்சத்தொடர்களின் தொடரியல் பண்புகள்

1. ஆங்கில மொழியில் காணப்பெறும் பெயரெச்சத்தொடர்கள் இணைப்புப் பதிலிப்பெயரை முதல் உறுப்பாகவும் முற்றுவினையை இரண்டாவது உறுப்பாகவும் கொண்டுள்ளன.

I saw the boy who came yesterday
He is the boy who bought the book

2. இணைப்புப் பதிலிப்பெயர்கள் வாக்கியத்திலுள்ள இணைப்புப்பெயரைச் சுட்டும் வகையில் அமைந்திருக்கும்.

The book which I read

இங்கு 'book' என்னும் இணைப்புப் பெயரைச் சுட்டும் வகையில் 'which' என்னும் இணைப்புப் பதிலிப்பெயர் அமைந்துள்ளது.

3. பெயரெச்சத்தொடரில் வரும் வினை ஒரு குறிப்பிட்ட காலப் பொருண்மையைச் சுட்டும்.

The boy who came (past)
The boy who is coming (present)
The boy who will come (future)

4. ஆங்கில மொழியில் ஒன்றிற்கும் மேற்பட்ட பெயரெச்சத் தொடர்கள் ஒரு வாக்கியத்தில் தொடர்ந்து வருவது உண்டு.

The Supreme teacher who appeared in the world
Who taught true wisdom and who did many
Good deeds is to be desired by many devotees.

இங்கு 'Who appeared', 'Who taught', 'Who did' என்னும் மூன்று பெயரெச்சத் தொடர்களும் 'supreme teacher' என்னும் இணைப்புப் பெயரைச் சிறப்பித்து வருகின்றன.

1. 2. 2. பெயரெச்சத்தொடர்களின் வகைகள்

1. 2. 2. 1 ஆங்கில மொழியில் பெயரெச்சத் தொடர்களில் அமைந்துள்ள வினை வடிவங்கள் தலைமைப்பெயரைப் பின் தொடர்ந்து வருவதால் இவை பின் எழுவாய்ப் பெயரெச்சத் தொடர்கள் (post nominal relative constructions) வகையினைச் சாரும்,

1. 2. 2. 2. ஆங்கில மொழியில் இணைப்புப்பெயருக்கும் பெயரெச்சத்தொடருக்குமிடையே வேற்றுமை உறவு அமைந்து வரப் பெறுதல் உண்டு. இவ்வேற்றுமை உறவின் அடிப்படையில், பெயரெச்சத் தொடர்களை எழுவாய் வேற்றுமை பெயரெச்சத் தொடர், செயப்படுபொருள் வேற்றுமை பெயரெச்சத் தொடர், உடன்நிகழ்ச்சி வேற்றுமை பெயரெச்சத்தொடர் கருவி வேற்றுமை பெயரச்சத்தொடர், கொடைப்பொருள் வேற்றுமை பெயரெச்சத் தொடர், இடவேற்றுமை பெயரெச்சத் தொடர் என ஆறாக வகைப்படுத்த முடியும்.

1. எழுவாய் வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்

இணைப்புப் பெயருக்கும் பெயரெச்சத்தொடருக்கும் இடையே எழுவாய் வேற்றுமை உறவுநிலை காணப்பெறும் நிலையில் பெயரெச்சத் தொடர்கள் எழுவாய் வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்கள் எனப்படுகிறது.

The boy who came yesterday

2. செயப்படுபொருள் வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்

இணைப்புப்பெயருக்கும் பெயரெச்சத்தொடருக்கும் இடையே செயப்படுபொருள் வேற்றுமை உறவு நிலை காணப்பெறும் நிலையில் பெயரெச்சத்தொடர்கள் செயப்படுபொருள் வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்கள் எனப்படுகின்றன.

The Child I saw

3. உடன் நிகழ்ச்சி வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்

இணைப்புப் பெயருக்கும் பெயரெச்சத்தொடருக்கும் இடையே உடன் நிகழ்ச்சி வேற்றுமை உறவுநிலை காணப்பெறும் நிலையில் பெயரெச்சத் தொடர்கள் உடன்நிகழ்ச்சி வேற்றுமைப் பெயரெச்சத் தொடர்கள் எனப்படுகின்றன.

The girl with whom I went

4. கருவி வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்

இணைப்புப் பெயருக்கும் பெயரெச்சத் தொடருக்கும் இடையே கருவி வேற்றுமை உறவு காணப்பெறும் நிலையில் பெயரெச்சத் தொடர்கள் கருவி வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்கள் எனப்படுகின்றன.

The knief with which I cut.

4. ஆங்கில மொழியில் ஒன்றிற்கும் மேற்பட்ட பெயரெச்சத் தொடர்கள் ஒரு வாக்கியத்தில் தொடர்ந்து வருவது உண்டு.

The supreme teacher who appeared in the world
Who taught true wisdom and who did many
good deeds is to be desired by many devotees.

இங்கு 'who appeared', 'who taught', 'who did' என்னும் மூன்று பெயரெச்சத்தொடர்களும் "supreme teacher" என்னும் இணைப்புப் பெயரைச் சிறப்பித்து வருகின்றன.

1. 2. 2 பெயரெச்சத் தொடர்களின் வகைகள்

1. 2. 2. 1 ஆங்கில மொழியில் பெயரெச்சத் தொடர்களில் அமைந்துள்ள வினை வடிவங்கள் தலைமைப்பெயரைப் பின் தொடர்ந்து வருவதால் இவை பின் எழுவாய்ப் பெயரெச்சத் தொடர்கள் (post nominal relative constructions) வகையினைச் சாரும்.

1. 2. 2. 2 ஆங்கில மொழியில் இணைப்புப் பெயருக்கும் பெயரெச்சத் தொடருக்குமிடையே வேற்றுமை உறவு அமைந்து வரப் பெறுதல் உண்டு. இவ்வேற்றுமைஉறவின் அடிப்படையில், பெயரெச்சத் தொடர்களை எழுவாய் வேற்றுமைப் பெயரெச்சத் தொடர், கருவி வேற்றுமைப் பெயரெச்சத்தொடர், கொடைப்பொருள் வேற்றுமைப் பெயரெச்சத்தொடர், இடவேற்றுமைப் பெயரெச்சத் தொடர் என நான்காக வகைப்படுத்த முடியும்.

1. எழுவாய் வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்

இணைப்புப்பெயருக்கும் பெயரெச்சத்தொடருக்கும் இடையே எழுவாய் வேற்றுமை உறவு நிலை காணப்பெறும் நிலையில் பெயரெச்சத் தொடர்கள் எழுவாய் வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்கள் எனப்படுகின்றன.

The child I saw was beautiful

2 கருவி வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்

இணைப்புப்பெயருக்கும் பெயரெச்சத்தொடருக்கும் இடையே கருவிவேற்றுமை உறவுநிலை காணப்பெறும் நிலையில் பெயரெச்சத் தொடர்கள் கருவி வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்கள் எனப் படுகின்றன.

The knife with which I cut

3. கொடைப்பொருள்வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்

இணைப்புப்பெயருக்கும் பெயரெச்சதொடருக்கும் இடையே கொடைப்பொருள் வேற்றுமை உறவுநிலை காணப்பெறும் நிலையில் பெயரெச்சத் தொடர்கள் கொடைப்பொருள் வேற்றுமைப் பெயரெச்சத் தொட ர்கள் எனப்படுகின்றன.

The girl to whom I gave my pen is my friend

4. இடவேற்றுமைப் பெயரெச்சத்தொடர்கள்

இணைப்புப்பெயருக்கும் பெயரெச்சத்தொடருக்கும் இடையே இடவேற்றுமை உறவுநிலை காணப்பெறும் நிலையில் பெயரெச்சத் தொடர்கள் இடவேற்றுமைப் பெயரெச்சத் தொடர்கள் எனப் படுகின்றன.

The place where I went

1.2.2.3 ஆங்கிலத்தில் காணப்படும் பெயரெச்சத்தொடர்களைப் பொருண்மை நிலையில் இனம்சுட்டும் பெயரெச்சத் தொடர்கள் என்றும், இனம் சுட்டாப் பெயரெச்சத் தொடர்கள் என்றும் இரு வகையினவாகப் பாகுபாடு செய்யலாம்

1.2 2.3 1 இனம்சுட்டும் பெயரெச்சத்தொடர்

இணைப்புப்பெயரின் தன்மையாகிய சூழலைப் பெயரெச்சத் தொடர் வரையறுக்குமாயின் அது இனம்சுட்டும் பெயரெச்சத் தொடர் எனப்படும்.

The Japanese who are industrious will conquer in the long run.

ஈண்டுக் கொடுக்கப்பெற்ற சான்றில் பெயரெச்சத்தொடர் ஜப்பானியர்களில் ஒரு குறிப்பிட்ட இனத்தவரான 'வர்த்தகர்களை' மட்டும் வரையறுத்துச் சுட்டுகின்றமையால் இவ்வகைப் பெயரெச்சத்தொடர் இனம்சுட்டும் பெயரெச்சத்தொடர் என அழைக்கப்படுகின்றது.

1.2 2.3 2 இனம்சுட்டாப் பெயரெச்சத்தொடர்

இணைப்புப்பெயரின் தன்மையாகிய சூழலைப் பெயரெச்சத் தொடர் வரையறுத்துக் கூறாது வருவதால் இவ்வகைப்பெயரெச்சத் தொடர்கள் இனம்சுட்டாப் பெயரெச்சத்தொடர் எனப்படும்.

இனம் சுட்டாப்பெயரெச்சத்தொடரில் இணைப்புபெயருக்கும், இணைப்புப் பதிலிப்பெயருக்கும் இடையே ஓர் அரைப்புள்ளி இருக்கும்.

The japanese, who are industrious, will conquer in long run

ஈண்டுக் கொடுக்கப்பட்டுள்ள சான்றில் பெயரெச்சத்தொடர் ஒரு குறிப்பிட்ட இனத்தவரை மட்டும் வரையறுத்துக் கூறாது அனைத்து ஜப்பானியர்களையும் குறிப்பதால், இப்பெயரெச்சத தொடர் இனம்சுட்டாப் பெயரெச்சத்தொடர் எனப்படுகின்றது.

இனம்சுட்டும் பெயரெச்சத்தொடர்களிலிருந்து பதிலிப் பெயர் களை நீக்கி விட்டாலும் பொருள் வேறுபடுவதில்லை. ஆனால் இனம்சுட்டாப் பெயரெச்சத்தொடர்களின்றும் பதிலிப் பெயர்களை நீக்கிவிட்டால் அப்பெயரெச்சத்தொடர்கள் இலக்கணப்பிழை யுடையனவாக அமைகின்றன.

All teachers that the minister disciplined are now strike
All teachers the minister disciplined are now on strike
—இனம்சுட்டும் பெயரெச்சத்தொடர்
All teachers, whom the minister disciplined are now on strike
All teachers, the minister disciplined are now on on strike
—இனம்சுட்டாப் பெயரெச்சத்தொடர்

தமிழ் - ஆங்கிலப் பெயரெச்சத்தொடர்கள் - ஒப்பீடு

தமிழ்மொழியில் ஒரு எச்ச வினையும் தலைமைப்பெயரும் இணைந்து பெயரெச்சத்தொடர்கள் அமைந்துள்ளன. ஆனால் ஆங்கில மொழியில் முற்றுவினையும் பதிலிப்பெயரும் இணைந்து பெயரெச்சத்தொடர்கள் அமைந்துள்ளன.

தமிழ்ப்பெயரெச்சத்தொடரில் எச்சவினை முதல் உறுப்பாகவும், தலைமைப்பெயர் இரண்டாவது உறுப்பாகவும் அமைந்துள்ளது. ஆங்கிலப் பெயரெச்சத்தொடரில் பதிலிப்பெயர் முதல் உறுப்பாகவும், முற்றுவினை இரண்டாவது உறுப்பாகவும் அமைந்துள்ளது.

தமிழ்மொழியில் பெயரெச்சத்தொடருக்கு முன்னால் இணைப்புப்பெயர் வருவதில்லை. ஆனால் ஆங்கில மொழியில் பெயரெச்சத்தொடருக்கு முன்னால் இணைப்புப்பெயர் வருகின்றது.

தமிழ், ஆங்கில மொழிகளில் பெயரெச்சத் தொடர்களில் வரும் வினைகள் ஒரு குறிப்பிட்ட காலப் பொருண்மையில் அமையப் பெறும்.

தமிழ்மொழியிலுள்ள பெயரெச்சத்தொடர்கள் தொடர்மொழியாக அமைய, ஆங்கில மொழியிலுள்ள பெயரெச்சத்தொடர்கள் முற்றாத்தொடர்களாக அமைந்துள்ளன.

தமிழ்மொழியில் பெயர்த்தொடரின் ஒரே உறுப்பாகப் பெயரெச்சத்தொடர் அமைய, ஆங்கில மொழியில் பெயர்த்தொடரின் உறுப்புகளாக பெயரெச்சத்தொடரும், இணைப்புப்பெயரும் அமைந்துள்ளன

ஒரு பெயரின் பண்பினைக் குறிக்க, தமிழில் பல எச்சவினைகள் அடுக்கி வருகின்றன; ஆனால் ஆங்கிலத்தில் பல பெயரெச்சத் தொடர்கள் அடுக்கிவருகின்றன.

தமிழிலுள்ள பெயரெச்சத் தொடர்கள் அனைத்தும் முன் எழுவாய்ப் பெயரெச்சத் தொடர்களாக அமைய, ஆங்கிலத்திலுள்ள பெயரெச்சத்தொடர்கள் அனைத்தும் பின் எழுவாய்ப் பெயரெச்சத் தொடர்களாக அமைந்துள்ளன.

தமிழ் மொழியிலுள்ள பெயரெச்சத்தொடர்கள் எச்சவினைக்கும் தலைமைப் பெயருக்குமிடையே காணப்படும் இலக்கண உறவின் அடிப்படையில் நிரப்பியுடைய பெயரெச்சத்தொடர் என்றும் நிரப்பியில்லாப் பெயரெச்சத்தொடர் என்றும் பகுக்கப்பட்டுள்ளன.

நிரப்பியில்லாப் பெயரெச்சத்தொடர்கள் எச்சவினைக்கும் தலைமைப் பெயருக்குமிடையே காணப்பெறும் வேற்றுமை உறவுகளின் அடிப்படையில் வேற்றுமை உறவுநிலைப் பெயரெச்சத் தொடர்கள் என்றும், வேற்றுமை உறவுநிலை இல்லாப் பெயரெச்சத்தொடர்கள் என்றும் பகுக்கப்பட்டுள்ளன.

வேற்றுமை உறவுநிலைப் பெயரெச்சத்தொடர்கள் வெவ்வேறு வேற்றுமைகளின் அடிப்படையில் எழுவாய்-பயனிலை உறவுப் பெயரெச்சத்தொடர் செயப்படுபொருள்-பயனிலை உறவுப் பெயரெச்சத்தொடர் கருவி-பயனிலை உறவுப்பெயரெச்சசத்தொடர், கொடைப்பொருள்-பயனிலை உறவுப் பெயரெச்சத்தொடர், நீங்கல் பொருள்-பயனிலை உறவுப்பெயரெச்சத்தொடர் இடம்-பயனிலை உறவுப் பெயரெச்சத்தொடர் என ஆறுவகையினவாகப் பகுக்கப் பட்டுள்ளன.

வேற்றுமை உறவுநிலை இல்லாப் பெயரெச்சத்தொடர்கள் தலைமைப்பெயரின் பண்பு அடிப்படையில் முறைமை வினையடை பயனிலை உறவுப்பெயரெச்சத்தொடர் எனவும், அளவு-பயனிலை உறவுப்பெயரெச்சத்தொடர் எனவும் இரண்டு வகையாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

ஆங்கிலமொழியிலுள்ள பெயரெச்சத்தொடர்கள், இணைப்புப் பெயருக்கும், பெயரெச்சத்தொடருக்குமிடையே காணப்படும் வேற்றுமை உறவின் அடிப்படையில் எழுவாய் வேற்றுமைப் பெயரெச்சத்தொடர், செயல்படுபொருள் வேற்றுமைப் பெயரெச்சத் தொடர், உடன் நிகழ்ச்சி வேற்றுமைப் பெயரெச்சத்தொடர்,கருவி வேற்றுமைப் பெயரெச்சத்தொடர், கொடைப்பொருள் வேற்றுமைப் பெயரெச்சத்தொடர், இடவேற்றுமைப் பெயரெச்சத்தொடர் என நான்கு வகையினவாகப் பகுக்கப்பட்டுள்ளன.

பொருண்மை நிலையில் தமிழ் ஆங்கில மொழியிலுள்ள பெயரெச்சத்தொடர்கள், இனம் சுட்டும் பெயரெச்சத்தொடர் எனவும், இனம் சுட்டாப் பெயரெச்சத்தொடர் எனவும் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்மொழியிலுள்ள பெயரெச்சத்தின் பணியினை ஆங்கில மொழியின் பெயரெச்சத்தொடரிலுள்ள இணைப்புப் பதிலிப் பெயர்கள் செய்கின்றன என இக்கால மொழியியல் அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர்.

ஆங்கிலமொழியிலுள்ள இணைப்புப் பதிலிப்பெயரும் வினையும் இணைந்த அமைப்பே தமிழ் மொழியின் பெயரெச்சத்திற்கு இணையாகச் செயல்படுகின்றது.

வந்த (பையன்) = (the boy) who come

மேலே கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டில் 'வந்த' என்னும் எச்சவினைக்கு இணையாக ஆங்கிலத்தில் இணைப்புப் பதிலிப் பெயரும் வினையும் இணைந்த "who came" என்னும் பெயரெச்சத் தொடரே அமைந்துள்ளது.

பெயரெச்சத்தொடர் என்பது ஒரு பெயரும் வினையும் இணைந்த ஒரு கட்டமைப்பு. தமிழ் மொழியில் அக்கட்டமைப்புக்குள் வரும் பெயரெ தலைமைப் பெயராகவும் அமைந்துள்ளது. ஆங்கில மொழியில் பெயரெச்சத்தொடருக்குள் அமையும் இணைப்புப் பதிலிப்பெயரே தலைமைப்பெயராக அமைகின்றது. இவ்விணைப்புப் பதிலிப்பெயர் ஒரு இணைப்புப்பெயரைச்சுட்டுகின்றது.

இணைப்புப் பதிலிப்பெயரால் சுட்டப்பெறும் இணைப்புப் பெயரே தலைமைப் பெயரென இலக்கண அறிஞர்கள் கூறுகின்றர். அவ்வாறு சுட்டப்பெறும் தலைமைப்பெயர் பெயரெச்சத்தொடருக்குள் அமையாது வெளியே அமைகின்றது. இவ்வாறு, பெயரெச்சத்தொடருக்கு வெளியே வரும் இணைப்புப்

பெயரைப் பெயரெச்சத்தொடரின் தலைமைப்பெயராகக் கொள்ளலாமா என்பது ஆராய்தற்குரியது.

துணைநூற்பட்டியல் :

1. **Andronov., M.,** 1969 A Standard Grammar of Modern and Classical Tamil, New Century Book House, Pvt. Lt., Madras.
2. **Arden, A. H.,** 1969 A Progressive Grammar of the Tamil Language, the ChristianLiterature Society, Madras.
3. **Athithan, A.,** 1979 "Peyarecca uravu nilaikal„ Ilakkiya Punka, Vol. VII, pp.88-93.
4. **Balakrishnan, R.,** 1974 "Relative Clause and Complementation in Tamil", Ayvukkovai, 6, pp.812-818.
5. **Friend, A. Jewell,** 1976 Traditional Grammer, Southern University Press, London and Amsterdam.
6. **Graham Mallinson & Barry J. Blake.** 1981 Language Typology, North Holland Publishing Company, Amsterdam.
7. **Greenberg, J.,** 1978 Universals of Human Language, Vol 4, Stanford University Press, Stanford.
8. **Lehmann, W. F.,** 1978 Syntactic Typology, University of Texas Press, Austin and London.
9. **Onions, C. T.** 1971 Modern English Syntax, Routledge and Kegan Paul, London.
10. **Roberts, Paul,** 1954 Understanding Grammar, Hamper & Row Publishers, Newyork.

பல்லவர்கால இலக்கியங்களில் சமுதாயம்

பா. மதிவாணன்

ஏறத்தாழக் கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டுக் கிடைப்பட்ட நான்கு நூற்றாண்டுகளைப் பல்லவர் காலம்[1] எனலாம். பல்லவர்க்கு முன் களப்பிரர் என்னும் மரபினர் தமிழகத்தை ஆண்டதாகத் தெரிகிறது. இவர்தம் காலம் பற்றிய சான்றுகள் மிகக் குறைவாகவே கிட்டியுள்ளன. சங்க காலச் சமுதாயத்தையும் பல்லவர் காலச் சமுதாயத்தையும் நோக்கும்போது இடைப்பட்ட களப்பிரர் காலத்தில் ஏற்பட்டு விட்ட ஒரு பெரு மாற்றத்தை உய்த்துணர முடிகிறது. பல்லவர் காலத்தைத் தொடர்ந்து சோழப் பேரரசு உருவாகிய காலத்திலும் சமுதாய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. இலக்கிய வரலாறும், சமுதாய மாற்றங்கட் கேற்ப இலக்கியங்கள் மாறியுள்ளதைக் காட்டும்.

பல்லவர் காலச் சமுதாயம் :-

'இக் காலத்தில் பெரும்பாலான நாயன்மாரும் ஆழ்வாரும் தமிழகத்தில் வாழ்ந்தனர் ; சமணரோடு போரிட்டுச் சைவ வைணவ சமயங்களைப் பரப்பினர் ; பேரரசர்களையும் சமயம் மாறும்படி செய்தனர்.[2]' அஃதாவது பல்லவர் காலத் தமிழகம் ஒரு சமயப் போர்க்களமாக விளங்கிற்று.

காஞ்சியில் பௌத்தப் பள்ளிகளும் ஆயிரக்கணக்கான பிட்சுக்களும் வாழ்ந்ததை யுவான்சுவாங் குறிப்பிடுகிறார்.[3] செழிப்பு மிக்க வணிகரும் உழவரும் சமண சமயத்தைச் சார்ந்திருந்தனர்.[4] குறிப்பாக வணிகர்களே சமண சமயத்திற்குப் பேருதவி புரிந்தனர் என்பதைக் கல்வெட்டுக்கள் காட்டும்.[5] நிறுவன அமைப்பில் நிலைத்த இச்சமண, பௌத்த சமயங்கள் பிற்காலத்தில் பெரு வீழ்ச்சியை எய்தின. குறிப்பாகப் பௌத்தம் தமிழகத்தில் இல்லாமலேயே ஒழிந்தது எனலாம்.

பல்லவர் காலத்தில் பல்வேறு தொழில் செய்தோரும் இருந்தனர்; வருண வேறுபாடுகளும் நிலவிற்று. இரண்டாம் மகேந்திர வர்மன் (சு. கி. பி. 668–670) வருணாசிரம தருமத்தை நிலை நாட்டினான் எனக் கல்வெட்டுச் செய்திகள் கூறும்[6].

சமண சமயத்தார் தாய் மொழி மூலமே தம் சமயத்தைப் பரப்பினர். பௌத்தர்களும் இங்ஙனமே பரப்பினர். அவர்தம் பள்ளிகளில் சிறார்க்குக் கல்வியளிக்கப்பட்டது. இன்றும் கல்விக் கூடம் 'பள்ளி' எனப் பெயர் பெறுதல் இக்காரணத்தாலேயாம்[7]. வேதக் கல்வி பிராமணர்க்கு மட்டுமேயுரியதாயிற்று. காஞ்சி முதலிய இடங்களில் கடிகைகள் வட மொழிக்கல்வி கற்பித்தன. தமிழைக் கற்பிக்கத் தனி நிறுவனங்கள் இருந்ததாகத் தெரியவில்லை யெனினும் நாயன்மார், ஆழ்வார் பாடல்களில் தமிழ் மொழி மிகவும் உயர்த்திப் புகழப்படுகின்றது.

இலக்கியங்களும் இயல்புகளும் :-

நாயன்மார், ஆழ்வார் பக்திப் பாக்களே பல்லவர் காலத்து உச்ச இலக்கியங்களாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் சுந்தரர் போன்ற நாயன்மார்களும், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் போன்றோரும் இக்காலத்தவர் என்பர்[8]. இவை தவிர வேறு சில நூற்பகுதிகளும், பல தனிப்பாடல்களும் கிடைத்துள்ளன. மூன்றாம் நந்திவர்மனைப் பற்றிய 'நந்திக்கலம்பகம்' முழுமையாகக் கிடைத்துள்ள குறிப்பிடத் தக்கதொரு நூலாகும்.

நாயன்மார் ஆழ்வார் பாடல்கள் இறைவட்டத்தில் நின்று பாடப்பட்ட பக்திப்பாக்கள்; உலகியல் வட்டத்தில் நின்று இறைவனைப் பாடும் சமயபாடல்களன்று என்கிறார் டாக்டர். ப. அருணாசலம்.[9] பக்திக் கவிஞர்கள் அருட்சிக்கவிஞர்கள் எனவும், உலகியலிலிருந்து ஒதுங்கி உணர்வுமயத்தில் ஒன்றியவர்கள் எனவும் க.ப அறவாணன் எழுதியுள்ளார்.[10]

உலகியலிலிருந்து ஒதுங்கி உணர்வு மயமாகப் பாடிய இவ்வருளாளர் பாடல்களில் சமண, பௌத்த எதிர்ப்பும், எள்ளி நகையாடலும் மிகக் கடுமையாயிருத்தலை மறுக்க இயலாது. இதற்குக் காரணம் அக்காலச்சமய சமுதாய உலகியல் நிலையே யாம். பிற இயல்புகட்கும் சமுதாயக் காரணங்கள் உளவா என்பதைப் படிப்படியே காணலாம்.

மானுடம் பாடாமை

'நாக்கொண்டு மானுடம் பாடேன்' என்று பாடுகிறார் திருமழிசையாழ்வார். நம்மாழ்வாரும் 'வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியேன் அல்லேன்' என்பார்.

'தம்மையே புகழ்ந்திச்சை பேசினும் சார்விலும் தொண்டர் தருகிலாப்

பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின்
புலவீர்காள்' என்பர் சுந்தரர்.

சங்க காலம் தொட்டுப் புலவர்கள் புரவலர் புகழ்பாடிப் பரிசில் பெற்று வந்துள்ளனர். இந்நிலையில் இம்மைக்குரிய பொருளை நாடாது மறுமைக்குரிய அருளை வேண்டுமாறு புலவர்களைத் தூண்டித் தாமும் அந்நெறியில் பல பாடல்களைப் பாடினர். பக்தியை ஒரு மக்கள் இயக்கமாக நடத்திய நாயன்மார், ஆழ்வார்கள் - தனியொரு சிலரை - அரசரேயாயினும் பாட மறுத்தனர். எனினும் மன்னரைப் பாடவேயில்லை என மறுக்க இயலாது.

''உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கம் செய்யும்
பெருமையாற் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாம் அன்றே" - எனச் சுந்தரர்

பாடும் போது பல்லவர்பால் அவருக்கிருந்தபற்று வெளிப்படுகிறது. இங்குப் பாடப்பெறும் பல்லவன் தெள்ளாறெறிந்த (மூன்றாம்) நந்திவர்மனாவான். திருத்தொண்டத்தொகையில் 'காடவர்கோன் கழற்சிங்கன்' எனப்படுவோனும் இவனே என்பர்[11] நந்திக் கலம்பகம் இவன் மீது பாடப்பட்ட நூலேயாம்.

மகேந்திரவர்மனும் நின்றசீர் நெடுமாறனும் சமணத்திலிருந்து சைவம் மாற முறையே அப்பரும் சம்பந்தரும் தூண்டுகோலா யிருந்தனர்.

பௌத்தர்கள் அனான்மவாதிகள். சமணர்கள் ஆன்மாக்களை உடன்பட்டு வீடுபெற்றுயர்ந்த அருகனையும் அருளாளர்களையும் இறைவனாக எண்ணி ஏத்தினர்.[12] சைவ, வைணவ சமயங்கள் முழுமுதற் கடவுளை ஒப்புக்கொண்டவை. எனவே அதற்கு ஏற்ப மானுடம் பாடாது மகேசனையும், மாலையும் பாட முற்பட்டன.

சமண பௌத்த எதிர்ப்பு

வைதிகச் சமயங்களாகிய சைவவைணவ சமயங்கள் சமண பௌத்த மதங்களைக் கடுமையாகத் தாக்கின. இவ்வணிகள் தமக்குள்ளேயே எதிர்த்துக் கொள்வதும் சிறுபான்மை காணப் படுகிறது

சமண பௌத்த எதிர்ப்பில் முதலிடம் பெறுபவர் திருஞான சம்பந்தரேயாவர். பதிகந்தோறும் புறச் சமயத்தாரைத் தாக்க அவர் தவறவில்லை.

> ''பொய்த்த வன்தவ வேடத் தாராஞ் சமண்
> சித்தரை யழிக்கத் திருவுள்ளமே'' — என்பது

அவர் அருளிச்செயல். சமண பௌத்தங்கள் சரிந்து போன காலத்துச் சுந்தரார்.

> ஞமணஞா ஞண ஞாண ஞோணமென் றோதியாயுரை
> நாணிலா
> அமணராற்பழிப் புடையரோநமக் கடிகளாகிய அடிகளே''

எனப் பிராகிருத மொழி ஓதியதை ஏளனம் செய்கிறார்.

> 'வெறுப்பொடு சமணர் முண்டர்விதியில் சாக்கியர்கள்
> நின்பால்
> பொறுப்பரியனகள் பேசில் போவதே நோயதாகிக்
> குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கே
> அறுப்பதே கருமங்கண்டாயரங்கமா நகருளானே',

எனத் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடுகிறார்.

வரலாற்றுப் பின்னணியில் வைத்தே இவற்றை நோக்க வேண்டும். ஞான சம்பந்தர் மடம் சமணர்களால் தீக்கிரையாக்கப் பட்டது. ஞான சம்பந்தரிடம் தோற்ற சமணர் கழுவேற்றப்பட்டனர். சமணனாயிருந்த போது மகேந்திரவர்மன் அப்பரைப் பலவாறு துன்புறுத்தினான். மகேந்திரன் சைவனான பின் திருப்பாதிரிப் புலியூரில் இருந்த சமணப் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்து, அக்கற்களைக் கொணர்ந்து திருவதிகையில் ஒரு சிவன் கோவிலைக் கட்டினான்.

> தேவாரப் பாடல்பெற்ற திருப்பதிகளின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் அப்பதிகளில் அக்காலத்தில் பௌத்தரும் சமணரும் குடியிருந்ததையும் பௌத்த சமணப் பள்ளிகளும் அங்கிருந்ததையும் அறியலாம்...... சமண சமயம் பல விதத்தில் தாக்கப்பட்டது. கொடுமைப்படுத்தல், கழுவேற்றுதல், கொலைசெய்தல், கலகம் விளைவித்தல், நிலபுலங்களைக் கவர்தல் முதலிய செயல்கள் நிகழ்ந்ததைக் காண்கின்றோம்.[13]

என மயிலை சீனி. வேங்கடசாமி விளக்கமாக ஆய்ந்து கூறியுள்ளார்.

திருமங்கை யாழ்வார் நாகப்பட்டினத்துப் பௌத்த ஆலயத்திலிருந்து பொன்னாலமைந்த புத்தர் சிலையைக் கவர்ந்து சென்று

அது கொண்டு திருவரங்கத்தில் திருப்பணிசெய்ததும் ஈண்டு எண்ணத்தக்கது.

மறைத்தலும் மாற்றலும் :

சமண பௌத்த சமயங்களைத் தாக்கி நிலைகுலைத்த பின்னர் அவர்தம் செல்வாக்கின் எச்சங்கள் பலவாறு மாற்றப்பட்டன. "திருக்கோவில்கள் புராண இதிகாசங்களோடு தொடர்பு படுத்தப் பட்டுச் சிறப்பிக்கப் படுதல், சங்க காலத்துக்குப்பின் சமயவுலகில் ஏற்பட்ட ஓர் வளர்ச்சி[14] என்பர். பல்லவர் காலத்திற்குப்பின் இது மேலும் வளர்ந்தது. சமண பௌத்தர் பள்ளிகளும், இருக்கைகளும் சைவராற் கைப்பற்றப்பட்டு வைதீக புராண இதிகாசக்கதைகளுடன் தொடர்புடைய கதைகள் பல கற்பிக்கப்பட்டன.[15]

'புத்தர் கோயிலை விநாயகர் கோயிலாக மாற்றியமைத்தனர் ; தருமராசர் கோயிலாகவும் மாற்றியமைப்பதுண்டு.[16]

"சம்பந்தரின் தேவாரத்தில் வரும் வர்த்தமானேச்சுரம், சாரநாதர் முதலிய சொற்கள் முறையே வர்த்த மானமகாவீரர், புத்தர் முதலிய புறச் சமயப் பெரியார்க்கு அமைந்த கோயில்கள் முடிவில் சிவாலயங்களாக மாற்றப்பட்ட உண்மையினை உணர்த்துவனவாகும்."[17]

சமணர் விழாக்கள், சடங்குகட்கெல்லாம் வைதீக அடிப்படையில் விளக்கங்கள் தரப்பட்டன.[18]

சாதிகளும் சமயங்களும்

பிறப்பினால் உயர்வு தாழ்வு காணும் குறுகிய மனப்பான்மை பண்டைக் காலத்தில் சமண சமயத்தில் இல்லை. பௌத்தமும் ஏறத்தாழ இத்தகையதே[19]. நாளடைவில் இவையும் சாதிப் பிரிவுகளை வைதிகக் கோட்பாட்டிற்குச் சற்று வேறுபட்டு-ஏற்றுக் கொண்டன.

"அங்கமெலாம் குறைந்தழுகு தொழுதோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவாழ் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர்யாம் வணங்கும் கடவுளாரே"

என்கிறார், நாவரசர். தொண்டரடிப் பொடியாழ்வாரும்.

அமரவோர் அங்மாறும் வேதமோர் நான்கு மோதித்
தமர்களிற் றலைவராய சாதி அந்தணர் களேலும்
நுமர்களைப் பழிப்பாராகில் தொடிப்பதோர் அளவில்

ஆங்கே

அவர்கள்தாம் புலையர் போலும் அரங்கமா நகருளானே, எனப் பாடுகிறார்.

'புலையரேனும்' - எனும் இழிவு சிறப்பும்மையும் 'அந்தணர் களேலும்' எனும் உயர்வு சிறப்பும்மையும் அக்காலச் சமுதாயத்தின் சாதி ஏற்றத் தாழ்வுகளைக் காட்டுவன.. எனினும் நாயன்மார், ஆழ்வார் பட்டியல்களையும், பாடல்களையும் நோக்க அவரிடையே யிருந்த சாதி எதிர்ப்புணர்வை அறியமுடிகிறது.

தெய்வத்தமிழ் :-

தமிழை முதன் முதலாகத் தெய்வநிலைக்கு உயர்த்தும் போக்கைப் பக்தி இலக்கியங்களிற்றான் காணமுடிகிறது.

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்'
"வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண்'

எனச் சிவனடியார்களும்

'செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி'
'தென்னந்தமிழை வடமொழியை நாங்கூரில்
மன்னும் மணிமாடக் கோயில் மணாளனை'

என மாலடியார்களும் பலவாறு போற்றிப் புகழ்கின்றனர்.

'நற்றமிழ் வல்லஞான சம்பந்தன்' 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்' - என்பன போன்ற இடங்களை நோக்கத் 'தமிழ்' பக்தியைக் குறித்து நிற்பதாகவே தோன்றுகிற தென்பர்[20]. 'ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர்' எனச் சமணர்களைச் சாடுவதும் நோக்கத் தக்கது.

"சமணர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், வாழ்க்கையில் விழுப்பம் கொடுக்கும் ஒழுக்கத்தை உயிரினும் ஓம்புவதற்கும் உழைத்தனரேனும் அவர்களுடைய உழைப்பானது உற்றஇடத்தில் கைகொடுத்து உதவவில்லை."[21] அறிவார்ந்த சமணர்கள் உணர்ச்சி மயமான இலக்கியங்களைப் படைத்தாரிலர்.

"ஓர் இயக்கம் மக்கள் இயக்கமாக வேண்டுமென்றால் மக்கள் பேசும் மொழியைப் போற்றுதல் வேண்டும். பக்தி இயக்கத்தை மக்கள் இயக்கமாக்கத் துடித்த இக்காலக் கவிஞர்கள், மண்ணில் வாழ்ந்த தமிழ் மொழியை மடிமேல் வைத்துப் போற்றினர்[22]". என்பது பொருத்தமே. ஆனால் அவர்கள் வட மொழியையும் பெரும்பாலும் இணைத்தே புகழ்கின்றனர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. ச. இராமநாதன், அவர்கள்
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.
2. திரு. கி. சந்திரமோகன், பி. ஏ., பி. எல்., அவர்கள்
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.
3. திரு புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள்
பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
4. திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பி. எச். டி., அவர்கள்
தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.
5. திரு. டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச். டி., அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
6. திரு. சிலப்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., அவர்கள்
தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், சென்னை.
7. திரு. பேராசிரியர் புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ., அவர்கள்
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.
8. திரு. பேராசிரியர், புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள்
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.
9. திரு. புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள்
பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
10. திரு. புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., அவர்கள்
உமாமகேசுவரா மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்-2.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

			உள் நாடு		வெளி நாடு
1.	ஆண்டு வரி	...	20—00	...	030—00
2.	தனி இதழ்	...	02—00		
3.	ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	—	100—00